திராவிடநாடு

மலர் 12 | 9—5—54 | இதழ் 45

"சீடர் சிலம்பம் எடுக்கிறார்!"

[சி. என் ஏ.]

அதோ புள்ளிமயில் தனது தோகையை விரித்தாடும் காட்சியைக் காணும்போது ரம்மியமாக இருக்கிறது. ஏன் மயில் அங்ஙனம் ஆடுகிறது? மனம் குளிர்ந்தது—ஆகவே ஆடுகிறது! அந்த நர்த்தனம் நமக்கெல்லாம் உள்ளத்திலே கொள்ளைக்களிப்பூட்டி உற்சாகப்படுத்துகிறது. மயில் ஆடக்காரணம் அதன் மன மகிழ்வு. மகிழ்ச்சியைத்தந்தது மேகம். குளிர்காற்றும் களிப்பூட்டிற்று. குயில் கூவுகிறது, கார் கண்டு களித்து. அந்தக் கீதம் கேட்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறது. கொவ்வைக்கனி கண்டு கிளி கொஞ்சுகிறது; பூங்கொத்துகளைக் கண்டு பூவையர் பூரிக்கின்றனர். புதையல் கண்ட ஏழை மகிழ்கிறான். குழவியின் கொஞ்சுமொழி தாய்க்குப் பேரின்பம். காதலியின் கண்வீச்சு காதலனுக்குக் கண்காட்சி. ஆம்! ஆடும் மயில், பாடும் குயில், கொஞ்சும் கிளி, பூரிக்கும் பூவை, இன்பம் கண்ட காதலர், களிப்பதற்குக் காரணம் மனம் குளிர்ந்தது என்பது தான். நமது நிதி அமைச்சர் சுப்பிரமணியனாரும் ஆனந்தத் தாண்டவமாடுகிறார், மனம் குளிர்ந்ததால்! தாளச் சத்தமும் தந்தினப் பாட்டுச் சத்தமும் கேட்டார், கேட்டதால் பூரிப்படைந்து, அடைந்த பூரிப்பைப் பொழிந்துதள்ளியுமிருக்கிறார். திருக்கோயில் ஒன்றிலே, புராண கதாகாலட்சேபம் நடைபெற்றதாம். அதைக் கேட்கப் பெருந்திரளான மக்கள் கூடி இருந்தனராம், கண்ணுக்கு விருந்தாகி, கருத்துக்குமோர் அருமருந்தாக அமைந்த அக் காட்சியைக் கண்ட நிதி அமைச்சர், என்னே இன்பம்! எத்துணைப் பேரின்பம்! எது இதற்கோர் ஈடு! என்று கூறுகிறார், கைத்தாளமிட்டுக் கானம் பாடுகிறார், கண்டறியாதன கண்டேன் என்று திருநடமாடுகிறார். காரக் கருவாடும் கலயம் வழியவழிய காடி ஏறிய கள்ளும் கிடைத்தால் காட்டேரி கோயில் பூஜாரி களிப்படைகிறான். வைரத் தோடணிந்த சீமாட்டி, வெள்ளித் தட்டிலே, வகைவகையான பழவகைகளை வைத்து, அதனைத் தங்க வளைகுலுங்கும் கரத்திலேந்திக்கொண்டு வரக்காணும், ரங்கநாதர் கோயில் அர்ச்சகர் ஆனந்தமடைகிறார் — களிப்பு ஒவ்வொருவரின் நிலைக்கும் தகுந்தபடியும், நினைப்புக்கு ஏற்றவண்ணமும் பிறக்கிறது. நிதி அமைச்சருக்கு, நாட்டிலே செல்வம் பெருகி, வளம் கொழித்து, மக்கள் மகிழ்கிறார்கள் மற்ற மண்டலத்தார் இந்தத் திரு ஏற்பட்ட வகை-யாது என்று கண்டறிய இங்கு வருகின்றனர், என்று நிலைமை இருந்திடக் கண்டால் மகிழ்வது முறை—உரிமையுடன் கூட மகிழலாம்—என் திறத்தின் விளைவினைக் காணீர், மக்கள் முகமெலாம் செந்தாமரையானது எங்ஙனம் எனக் கூறுதும் கேளீர், என்று பெருமிதத்துடன் சொற்பொழிவே கூட நடத்தலாம். ஆனால், நிதி அமைச்சர் சுப்ரமணியனார், மகிழ்வது, இது போன்ற காரணத்துக்காக அல்ல. மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில். பெரிய புராணப் பிரசங்கம் துவக்கப்பட்டதாம். அதற்குப் பெருந்திரளான மக்கள் வந்திருந்தனராம்; அதைக் கண்டதும், மந்திரியாருக்கு மனதில் சொல்லொணா மகிழ்ச்சிப் பெருக்கு ஏற்பட்டுவிட்டது. தாங்கொணாது போய்விட்டதால்போலும், வெளியே அதனைக் கொட்டியும்விட்டார்.

"எல்லாக் கோயில்களிலும் எல்லா வீதிகளிலும் என்று புராணப் பிரசங்கங்கள் ஆரம்பிக்கப்படுகின்றனவோ அன்றே நம் நாடு பழம் பெருமையை மீண்டும் பெறும். பழைய உன்னத நிலையைத் திரும்ப அடையும்" என்று இந்தப் புதிய பாகவதர் திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார்.

அந்தத் திருமயிலைக் கூட்டம், அமைச்சரின் ஆனந்தத்தையும் நம்

பிச்சையையும் கிளறிவிடத்தக்கவிதமாக அமைந்திருந்திருக்கவேண்டும். வறண்ட தலையரும் இருண்ட கண்ணினரும் அங்கு இருந்திரார்—அங்கு நடையை நாட்டியமாக்கிக் கொண்ட நாரீமணிகளும், நாட்டிலே உள்ள சுவைகளைப் பருகிடும் சுகபோகிகளும், தொந்திசரியும் பருவத்தினராயினும் மாளிகை தரும் மகிழ்ச்சியும் மருந்து வகை தரும் கவர்ச்சியும் சேர்ந்து சுந்தரபுருஷர்களாகிக் காட்சி தரும் கனதனவான்களும் கூடி இருந்திருப்பர். எப்பக்கமும் 'டால்' அடித்திருக்கும்! எங்கும் இனிமை மின்னியிருக்கும்! திருமயிலை அல்லவா!! எனவே, ஆனந்தம் மேலிட்டு, அமைச்சர், அடியாராகி, காலட்சேபம் செய்யவே முயற்சித்திருக்கிறார்!

வேலை இழந்த டிராம்வே தொழிலாளி, அல்லற்படும் அச்சுத்தொழிலாளி, அவதிக்காளான ஆலைத் தொழிலாளி, வேதனையில் உழலும் விவசாயி, வறுமைத் தேள் கொட்டினதால் துடித்தழும் பிற தொழிலாளர்கள், அங்குகூடி இருந்திருக்க மாட்டார்கள்—அவர்களுக்குநேரம் ஏது — அவர்களைக் கண்டால், அமைச்சருக்கு எப்படி ஆனந்தம் பிறக்கும்? அந்தக் கவலை தோய்ந்த முகங்களையும், கனல்கக்கும் கண்களையும் கண்டால் 'கனம்' போலீசைத் துணைக்குக் கூவி அழைக்க எண்ணி இருப்பாரேயன்றி, பொற்காலம் பிறக்கப் புராணம் நடாத்துக என்ற உபதேசமா பேசத் துணிந்திருப்பார். அந்தப் பஞ்சைகள், அடிக்கடி கூடுவர், அழுகுரலில் பேசுவர், அவதியைக் காட்டுவர், ஆளவந்தார்களுக்கு அறைகூவல் விடுவர், எமது உழைப்புத்தானே உமது உல்லாச வாழ்வுக்கு ஆதாரம் என்று கேட்பர், ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும் என்று பேசுவர், செஞ்சீனாவைப் பார், சிகப்பு ரஷ்யாவைப் பார், தழும்பேறிப் போயிருக்கும் எமது உடலைப் பார், உலக வரலாற்று ஏடுகளையும் மறுமுறை கவனத்தோடு படித்துப்பார் என்று ஏதேதோ பேசுவர், எலாதனவெல்லாம் கூறுவர், நமதே உழைப்பு, உழைப்பே உடைமை, தனிஉடைமை தகர்ப்போம், பொது உடைமை வளர்ப்போம் என்றெல்லாம் முழக்கமிடுவர். 'கனத்தின்' காதுகளுக்கு இவை நாராசமாகவன்றோ இருக்கும். காலையெல்லாம் சுடும் வெயிலைக் குறைக்கக் கடற்காற்று, அதனை அழைத்துவந்து உறவாடச் செய்யும் தூதிபோன்ற மின்சார விசிறியும், வெல்வெட்டு மெத்தையும், பில்லை அணிந்த சேவகரும், பிரியமுடன் பேசவரும் பிரமுகரும், அமைச்சருக்குக் களிப்பூட்டின — அந்தக் களிப்பைக் கருக்கிடும் காட்சியாகவல்லவா இருக்கும் பாட்டாளிகளின் கூட்டம்! அடைந்த ஆனந்தத்தை அரை நொடியில் அழித்துக்கொள்வதா! பெற்ற இன்பத்தை, பஞ்சைபராரிகளின் கூட்டத்தில் கலந்து கொண்டால், இழக்கத்தானே வேண்டிவரும்! அமைச்சர் இதனை அறியாரா? நன்கறிவார்! எனவேதான், நளினிகளும் நவநிதி பெற்ற பூபதிகளும் நிரம்பிய திருச்சபைக்குச் சென்றார், அங்கு அவருடைய மனம் குளிர்ந்தது. எனவே பண் இசைக்கிறார், பரவசப்படுகிறார்.

*

“அடுத்தாத்து அம்புஜத்தோட புருஷனுக்கு, அம்பாசிடர், வேலை வருகிறதாமடி லத்கு! ஜவர்லால் வாக்களித்துவிட்டாராம்!”

“ஆமாம்—ஏண்டி கனகம் கிடைக்காது! அம்புஜத்தோட “சித்தியா” யார் தெரியுமேன்னோ? அனந்தசயனம் ஐயங்கார்! அவருக்கு டில்லியிலே அமோகமான செல்வாக்கேன்னோ”

இப்படி ஒரு உரையாடல்.

“ஏண்டி ஏமலதா! உன் பேத்தி, நாட்டியமாடினாளாமே — சானக் கொடுத்து வைக்கல்லே!”

“ஆமாம்! கோர்க்கையோட நடனத்தைக் கண்டு கவர்னர், ரொம்ப ரொம்பப் பாராட்டினார்”

‘வடநாட்டுக்காரரா இருந்தாலும், நம்மகவர்னர் நல்ல ரசிகர்டீ! பரத சாஸ்திரம் கூடத் தெரியுமாமே”

“வடநாடு, தென்னாடு என்பதெல்லாம் அர்த்தமற்ற பேச்சேன்னோ—இந்த நாய்க்கர் கூட்டத்தவா பேசற பேச்சு, நாட்டியத்திலே, வடநாடு என்ன, தென்னாடு என்ன! மலையாளத்துக்கதகளியானாலும், மணிப்பூர் நடனமாடினாலும், பாவம் தெரிந்து ஆடினா, யாரும் ரசிக்கத்தான் செய்வா”

இவ்விதம் இருவர் பேசியிருப்பர் ஒரு புறம்.

“ஓய் இந்த ஆசாமி மெத்தசமத்து—என்ன சொல்றீர்!”

“யாரைக்குறிப்பிட்டுப்பேசறீர்—யாரை?—சுப்ரமணியத்தையா! ஆமாம் ஆமாம், ஆனாலும், சமத்துன்னு சொல்றதைவிட, நல்ல அதிர்ஷ்டக்காரர்னு சொல்லும்”

“நீர்சொல்றதும் வாஸ்தவந்தான். பாருமே, ஆச்சாரியார் ராஜிநாமாச் செய்ததும், கனிகண்ணன் போகின்றான்—நீயும் உன்பைந்நாகப்பாயைச் சுருட்டிக்கொள் என்கிற மாதிரியா, இந்த ஆசாமியும் போய்விடுவார்னு எல்லோரும் சொன்னா — ஆனா அதிர்ஷ்டம் பார்த்தீரா—இப்பவும் மந்திரியாத்தான் இருக்கார். யோக ஜாதகம் ஓய்! யோக ஜாதகம்”

“ஆனாலும், இந்தக்கூட்டு நிலைக்குமா என்கிறதிலே, நேக்குச் சந்தேகம் தான்”

“உம்ம சந்தேகத்தைக் கொண்டு போய்க் கடலிலே கொட்டும். கிடைக்கிறவரையிலே அனுபவிக்கிறதா, நீடிக்குமா நிலைக்குமாஎன்று எண்ணி எண்ணி விம்மிண்டு கிடக்கிறதா!”

இப்படிச் சிலர்உரையாடிக்கொண்டிருந்திருப்பர்.

மோட்டாரின் விலை, புதிய மாளிகையின்விலை, வைரமாலையின்விலை, வட்டித் தொகையின் கணக்கு, வரதட்சிணை, வர இருக்கிற புதியவேலை, இவைபற்றிப்பேசியிருப்பர். பேச்சு பலமாக இருந்திருக்கும், ஆனால், இல்லாமை, இயலாமை, போதாமை, என்பவை அந்தப்பேச்சுகளிலே தலைகாட்டி இருக்கமுடியாது. சிங்காரச் சீமான்களும் அவர்களைச் சுழல் விழியால் ஆளும் சீமாட்டிகளும் நிரம்பிய திருச்சபையிலே, மல்லிகை மணமும், மனோரஞ்சித வாடையும், அத்தர் புனுகு அள்ளித்தரும் மணமும், ஆனந்தம் தரும் அழகொளியும் இருந்திருக்குமேயொழிய, வியர்வையும்கண்ணீருமா, இருந்திருக்கும்! அவர்கள்பன்னீரில் குளித்தெழுந்தவர்கள்!! அந்தப்பன்னீர், ஏழையின் கண்ணீர்தான்!

இருந்தால் என்ன! அதைமறைக்கத் தான் அதோபாடுகிறாரே புராணீகர், "முன்னைத் தீவினையால் மூழ்கினேன் துயரமதில், என்னைக்கைவிடுதல் நியாயமோ என்னப்பா! உன்னைத் தொழுது வந்தேன் என்னை ஈடேற்ற எழுந்தருள்வாய், எம்மானே!"

அமைச்சருக்கு ஏற்ற அற்புதமான அவை! அவைகளுக்கு ஏற்ற அமைச்சர்! எனவேதான், முழுத் திருப்தியுடன் முழக்கமிட்டிருக்கிறார், வழுக்கிவிழ இருந்து தப்பித்துக் கொண்ட "கனம்"

அன்று அவர் அங்கு கண்ட காட்சியை அமைச்சர், என்றும் எங்கும் காணவிழைகிறார் — அப்போதுதான் பொற்காலம்பிறக்குமாம்! அவர்கூறுகிறார். எங்கும் புராணப் பிரசங்கம் நடத்தி வந்தால் பொற்காலம் பிறக்குமா பிறவாதா என்பது ஒரு புறமிருக்கட்டும், அமைச்சர் கூறியதிலிருந்து வேறொன்று தெள்ளத் தெளிய விளங்கி விடுகிறது! பொற்காலம் பிறக்க வேண்டுமானால், அது எம்மால் கிடைக்குமென்று எண்ணி ஏமாறுதீர்கள்! அமைச்சர்களாகிய எமக்கு, அது இயலாது! திறமையோ தகுதியோ கிடையாது! எனவே நாங்கள் பொற்காலம் ஏற்பட முயற்சிக்கவும் மாட்டோம்—முடியாததை முயற்சிப்பானேன். பொற்காலம் பெற, எம்மை நம்பிக் காலங்கடத்தாதீர்கள். வீதிகளிலெல்லாம், திருக்கோயில்களில் எல்லாம் காரைக்காலம்மையையும் கண்ணப்ப நாயனாரையும், கரிவலம் வந்தகாட்சியையும், கரம் தேய்த்த பக்தரையும், சிறுத்தொண்டரையும், கோட்புலியையும் மண்டையை உடைத்துக் கொண்டமகானுபாவரையும், மனைவியின் மூக்கினைக்கொய்த அடியாரையும், இல்லையே என்னாத இயற்பகையையும், பற்றிய புராணங்களை நடத்துங்கள் பொற்காலம் பிறக்கும், என்று தெளிவாக அமைச்சர் கூறிவிட்டார்!

நிதி அமைச்சர் இளைஞர், எனவே திறமையைத் தேடிப் பெறக்கூடியவர், வழக்கறிஞர் எனவே பிரச்னைகளின் நுட்பங்களை ஆய்ந்தறியவல்லவர், எனவே நாட்டின் பிணிகளான வறுமை, வேலையில்லாக் கொடுமை, அகவிலை, தொழில்வளம் நசித்து வருவதுபோன்றவைகளைப் போக்கிடப் புது வழிவகை காண்பார். பல்வேறு நாடுகளிலே ஆள்வோர் நடாத்திவரும் முறைகளை எல்லாம் கண்டறிந்து, இந்நாட்டுக்கு, இது போது, எம்முறை தக்க பலனை மெத்தச் சிரமமின்றித் தரவல்லது என்று கண்டறிந்து புகுத்துவார், அவருடைய திறமையால், கண்ணீர் துடைக்கப்படும், வாட்ட வருத்தம் ஓட்டப்படும், வாழ்விலே மலர்ச்சி ஏற்படும், பொற்காலம் பிறக்கும் என்று சிலர் எண்ணிக்கொண்டிருக்கக்கூடுமல்லவா — அவர்களுக்கெல்லாம், தலையில் குட்டி அறிவிக்கிறார் அமைச்சர், மதியிலிகளே! நானா அந்தக் காரியம் செய்யவல்லவன்! பொற்காலம் பிறக்க வேறு வழி தேடுங்கள்—நல்ல வழி நானே கூறுகிறேன்—கூடுங்கள், ஐயன் புகழ் பாடுங்கள்—தேடுங்கள் திரு அருளை — நாயன்மார்களின் காதைகளைக் கேளுங்கள் — பஜனைமடம் சேருங்கள்—என்று அமைச்சர் அறிவித்துவிட்டார். அவர்மீது இனி எவரும் குறை கூறுவதற்கில்லை – அவர், தம்பால் மக்களை வாழவைக்க, நாட்டிலே நல்ல நிலைமையை உண்டாக்க செழிப்பைக் காட்டிட இயலாது என்பதைத் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். நம்மால் இனி ஆகாது—புண் புரையோடிவிட்டது — கார மருந்து வைத்துப் பார்த்தேன் பலன் காணோம்—இனி 'ஆபரேஷன்' செய்து பாருங்கள் என்று கூறிடும் கட்டு மாத்திரை கந்தசாமிப் பண்டாரம்போலவும், ஆபரேஷன் செய்தும் பார்த்தாகிவிட்டது, குணம் தெரியக்காணோம், ஆரூடக்காரனைக் கூப்பிட்டுக் கேட்டுப் பாருங்கள், ஆயுள் பாக்யம் எப்படி இருக்கிறதோ என்று கூறிவிட்டுச் செல்லும் டாக்டர்போலவும், அமைச்சர், திட்டவட்டமாகக் கூறிவிட்டார், நாட்டின் பொதுச் செல்வத்தைப் பெருக்கி, தொழில்வளர்த்தைப் பெருக்கி, மக்களுக்குப் புதுவாழ்வு தர என்னால் இயலும் என்று எண்ணிக்கொண்டு இருந்துவிடாதீர்கள்! இப்போதே சொன்னேன், பிறகு என்மீது குறை கூறுதீர்கள், உங்கட்கு வாழ்வளிக்க, வேறு வழி நாடுங்கள், திருப்புகழ் பாடுங்கள் என்று கூறிவிட்டார்! அம்மனமா

அந்த மந்திரம் அறியேன்!

ஒரு மாதத்தில் 'திராவிடநாடு' பெற்றுத் தருவேன் என்ற கருத்துப்பட, நான் சேலம் மாநாட்டிலே பேசியதாக 'தினத்தந்தி' தெரிவித்திருக்கிறது! மந்திரக்கோல் கொண்டவன் பேசுவதுபோல இருக்கிறது, அந்தப் பேச்சு!! நான் அந்த மந்திரம் அறியேன், ஒரு மாதத்தில் திராவிட நாடு பெற்றுத் தர இயலும் என்று நான் கூறவில்லை—நிருபர், எப்படி இந்த விசித்திரமான பேச்சைத் தயாரித்தாரோ, தெரியவில்லை!!

'திராவிட நாடு'—மந்திரத்தில் முளையும் மாஞ்செடி அல்ல!!

இன எழுச்சி, குறிப்பிடத்தக்க அளவு ஏற்பட்டு, விடுதலைப்போரின் பல கட்டங்களையும் சமாளிக்கும் வலிவு கிடைத்து, தியாகம் பல செய்து பெறவேண்டிய திருநாடு!—இதை ஒரு மாதத்தில் பெற்றுத்தருவதாக நான் பேசினதாக வெளியிடுவது, என்னையல்ல, திராவிட நாடு பிரச்சினையைக் கேலி செய்வதாகும். அதனாலேயே, நான், அந்தச் செய்தி கண்டு வருத்தப்பட்டேன்.

தி. மு. கழக ஏடுகளிலேவெளிவந்தாலொழிய, இத்தகையசெய்திகளை, நம்பமாட்டார்கள் தோழர்கள் என்பதை நான் நன்கு அறிவேன், எனினும் பொதுமக்கள், இப்படியும் நான் பேசினேனோ என்று எண்ணிவிடப் போகிறார்கள் என்பதை எண்ணியே, இந்த விளக்கம் வெளியிட்டேன். செய்திகள் வளரட்டும்! வதந்திகள் குறையட்டும்!

அன்பன்,
அண்ணாதுரை.

யின், ஐயா! எம்மை வாழ்விக்கும் வகை அறியாத உமக்கு அமைச்சர் பதவி எதுக்கு? பொற்காலம் காண பஜனைமடம் போதும் என்றால், பாராளுமன்றம் எதற்கு? அடியார்களின் காதைகளைக் கேட்டு இன்புற்றால், அவதிகள் யாவும், காய் கதிரோன்முன் பட்ட பனியாகும் என்றால், 'கனம்கள்' எதற்கு? என்று கேட்கத் தோன்றும் உங்கட்கு! கேட்டுத்தான் பாருங்களேன், 'கனம்' கண்ணைச் சிமிட்டிப் புன்னகை செய்துவிட்டுக் காரில் ஏறிக்கொண்டு போய்விடுவாரே தவிர, பதிலளிக்கமாட்டார்! நமது ஏமாளித்தனத்தால் 'கனம்' ஆகிவிட்டவர்களிடம், நாம், இதைவிட வேறு என்ன எதிர்பார்க்கமுடியும். உலகிலே, 'பாரத்'மட்டுமல்ல, பலப்பல நாடுகள் உள்ளன—பண்டைப் பெருமை வாய்ந்தவைகளும் உள்ளன—புதுயுகச் சித்திரங்களும் உள்ளன — அங்கெல்லாம் கூட அமைச்சர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் — நிதி அமைச்சர்களும் உள்ளனர் – நிதிப்பிரச்னையைப் புரிந்துகொண்டுள்ள—புரியாதவருக்குப் புரியவைக்கும் ஆற்றலும் படைத்த நிதி அமைச்சர்கள் உள்ளனர்—அவர்களில் யாரும், நமது நிதி அமைச்சர் தந்த அந்த 'மதிமிகு' திட்டம்போலப் பேசினாரில்லை, பேசிடத் துணியவும் செய்யார், பேசிட முனைந்தால், மக்கள் வாளா இருத்தலும் கிடையாது. ஒரு நாளும் நாம் கேள்விப்படுவதில்லையே, பிரிட்டிஷ் வியாபாரம் செழிக்க, பண்டங்களின் உற்பத்தி பெருக, பால் தேவாலயம் சென்று பஜனை செய்துவாரீர், என்று பேசும் பிரிட்டிஷ் நிதி அமைச்சரைப்பற்றி! வளர்ந்துள்ள பிரிட்டனைத் தள்ளிவிடுவோம்! இருண்ட கண்டம் என்று ஏளனம் செய்யப்படும் ஆப்பிரிக்காவில் ஒரு பகுதியாக இருக்கும் அபிசீனியநாட்டு அமைச்சர்கள் கூட, பொற்காலம் பிறக்க பஜனை செய்வீர் என்று பேசிடக் கேட்டதில்லை. இங்குதான் காண்கிறோம், இத்தகைய விசித்திரத்தை!

நிதி அமைச்சர், இங்ஙனம்பேசிய போது, தமது நிலைமை, முன்பு இருந்ததைவிட ஒருபடி உயர்ந்துவிட்டதாகக் கருதிக்கொண்டு, இறும்பூதெய்தி இருக்கக்கூடும் — இளைஞர் ஆசையால் இறுமாந்துமிருக்கக்கூடும் — ஏனெனில் திருக்கோயிலில் இங்ஙனம் பேசியபோது அவர் முன்பு ஆச்சாரியார் மேற்கொண்டிருந்த வேலையைச் செய்யும் உயர்நிலை தமக்குக் கிடைத்திருப்பதாக எண்ணிக்கொண்டிருப்பார்! ஆச்சாரியார் இரண்டாண்டு காலம் இந்த 'ஆண்டி அகவல்' பாடியே அனைவரையும் ஏய்த்துவிடலாம் என்றுதான் எண்ணினார்—அந்தோ! பரிதாபகரமான தோல்வி அடைந்தார்—குரு குப்புற விழுந்த பிறகு இந்த சிடப்பிள்ளை 'மூண்டா' தட்டிக்கொண்டு 'கோதா'வில் இறங்குகிறது! சிறிய சிறுத்தை குகைக்குள் ஓடி ஒளிந்த பிறகு சிறு நரி ஊளையிட்டு உலவிடும் காட்சி போலிருக்கிறது இது! வேத வேதாந்த சிரோமணி, தத்துவ விளக்கம் உரைப்பதில் அவர் மகா பண்டிதர், ஞானபோதனை செய்யத்தக்க தகுதிவாய்ந்தவர், மகான் என்று ஏடெல்லாம் புகழ்ந்தன ஆச்சாரியாரை, அவரும் செல்லுமிடமெங்கும், ஜெகத்குரு சங்கராச்சாரியார் போலவே, மண்ணை மறவுங்கள்! விண்ணகத்தை எண்ணுங்கள்! ஆசைகளை அகற்றுங்கள்! ஆத்மார்த்தத்தை நாடுங்கள்! என்று பேசினார் — பேசினாரா? — உபதேசமே செய்தார். பத்திபத்தியாக, பக்கம் பக்கமாக அவருடைய 'பஜகோவிந்தத்தை' ஏடுகள் வெளியிட்டன. புதிய வரிபற்றிய பிரச்னையானாலும் புதுக் கல்வித் திட்ட விளக்கமானாலும், ஜனநாயகம்பற்றிய பேச்சானாலும் வெளிநாட்டு விவகாரமானாலும், எதற்கும் ஆச்சாரியார் ஒரே பல்லவி பாடிவந்தார். அது மெத்தப் பயனளிக்கும் என்றும் மனப்பால் குடித்தார். அந்தப் பேச்சினால், அவரால் என்னசாதிக்க முடிந்தது? கொதிப்பும் கொந்தளிப்பும் குறைந்தனவா? கிளர்ச்சியும் எழுச்சியும் நசித்தனவா? கேள்வியும் எதிர்ப்பும் பட்டுப்போயினவா? இல்லையே! மாறாக அவர், 'மகான்' வேஷம் போடப்போட, மக்களின் முழக்கம் வலுவடைந்தது — அவர் மதபோதனை செய்யச் செய்ய, எமது வேதனை தீர வழி கூறவந்தீரா, இவை ஆண்டவன் சோதனை என்ற ஆண்டிப்பேச்சுப் பேசவந்தீரா, நீர் யார், அமைச்சரா, ஆலயப் பூஜாரியா? என்று மக்கள் கேட்கலாயினர்! பதவியையே இழந்துவிட நேர்ந்தது! குருவின் கதி இது! குட்டித்தம்பிரான், அவரிடம் கேட்டு, கெட்டுருப்போட்டவைகளைக் கக்கிக் காணப்போவதென்ன?

*

ஆழ்வாராதிகளும் நாயன்மார்களும், அருளாளர்களும் அருமறை கற்றோரும், உலவி உபதேசம் செய்து, ஊராரின் உள்ளத்திலே பஜனையை நிரப்பி வைத்தகாலம் பொற்காலம் என்று நம்பச்சொல்கிறார், அமைச்சர்! அந்த பொற்காலம் மீண்டும் காண, மீண்டும் திருக்கோயில்களிலே புராணங்களை நடத்துங்கள் என்று கூறுகிறார்.

பொற்காலம் என்பதற்கு அமைச்சர் கொண்டுள்ள பொருள் என்ன என்று நமக்குத் தெரியவில்லை— அவர் தெரிவிக்கவில்லை — தெரிந்துகொண்டிருக்கிறாரோ என்பதே ஐயப்பாடுதான். பொற்காலம் என்றால், மக்கள் துயரின்றி, இன்புற்று வாழ்வது, இயற்கைச் செல்வத்தை, அறிவு நுட்பத்தாலும் தொழில் செய் திறமையாலும், வகையும் வளமும், பயனும் உருவும் உடையதாக்கி, மக்களின் வாழ்வுச்சுவையை அதிகமாக்குவது, எத்தனும் ஏமாளியுமின்றி, சுரண்டிப் பிழைப்போனும் சூதுமதியினனும், உழைத்து உருக்குலைந்தவனும் ஓட்டாண்டியானவனுமின்றி, எல்லோரும் ஒப்பப்பர் என்ற நிலை அடைந்து, பொது ஒழுக்கம், நீதி, நாணயம், நேர்மை, அன்பு, அறம் என்பவைகள் தழைத்திருக்கும் பண்பு நிறைந்த நிலை அடைவது, பொற்காலம் என்று கூறப்படலாம். மாளிகைகள் மமதையைக் கக்கிக் கொண்டும், குடிசைகள் வேதனையை வெளியிட்டுக்கொண்டும், ஆடலழகிகளின் சிரிப்பொலியைக் கேட்டுத் தேய்ந்த கையலர் திகைத்துக்கொண்டும் உள்ள நிலை, பொற்காலம் ஆகாது! தங்கக் கோப்பையில் ஊற்றித் தந்தாலும் நச்சு நீர் இருப்பின் அதை மந்த மதியினரும் உட்கொள்ளார். அதுபோல, பொற்காலம் என்ற முலாம்பூசி நச்சு நினைப்பினர் நாட்டைக் கெடுக்

(13-ம் பக்கம் பார்க்க)

அந்த உண்மை!

[அண்ணல்]

"கெடுக்கிறார்கள், மக்களை!"

"நீ ஏனடா, ஏழையாயிருக்கிறாய்? அவனைப் பார், ஆனந்தமாயிருக்கிறான்! நீயும் அவனும் மனிதன் தானே—என்றெல்லாம், கூறுகிறார்கள்"

"அதுவும், அந்த ஏழை ஜனங்களிடமே, போய்!"

"ஆமாம்! அதோடு நிற்கிறார்களா? உயர்ந்த ஜாதியென்று உளறுகிறோடா! அய்யர்மட்டும் ஆண்டவனைத் தொடலாமா? அவருக்கும் நம்மைப்போல, இரண்டு கைதானே இருக்கிறது? அவர் மட்டும் எப்படி உயர்வாம்! நீ, தாழ்வாம்! — என்றும் சொல்லுகிறார்கள்"

"பாருங்களேன்! பணிந்து வேலை செய்வான் என் பண்ணையாள், பக்கிரி. கொடுத்ததை வாங்கிக் கொள்வான். இப்போது இவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு, 'கூலி, போதாது, சாமி!' என்கிறான்."

"சாமி!—என்றாவது உமது ஆள் சொல்லுகிறான். முன்பெல்லாம் என்னைக் கண்டதும், 'சாமி' என்று ஒதுங்கிப்போவானே இருளன், இப்போது என்ன செய்கிறான், தெரியுமோ? தலையிலிருக்கும் முண்டாசையும் அவிழ்ப்பதில்லை! காலில் கிடக்கும் செருப்பையும் கழட்டுவதில்லை!"

"அவ்வளவு தூரம் ஜனங்களைக் கெடுத்து விட்டார்கள், இந்தக் கழகத்தார்."

"ஜனங்களிடமே போய் இதையெல்லாம் எடுத்துச் சொன்னால், அவர்கள் கெடத்தானே செய்வார்கள்!"

"பேச்சாம்! கூட்டமாம்! மாநாடாம்! ஊர்வலமாம்! அறப்போராம்!"

"நிறுத்தி விட்டீரே, நீர்! அதோடா நிற்கிறார்கள். பாடுகிறார்கள்! ஆடுகிறார்கள்! நாடகம் போடுகிறார்கள்!"

"சினிமாவும் எழுதுகிறார்கள்..."

"செச்சே! ஜனங்களை, இப்படியா, கெடுப்பது?"

*

கெடுக்கிறோமாம், நாம்! எங்கெங்கு சாண்டலால் கொழுத்த சூதர்கள் இருக்கிறார்களோ, அங்கெல்லாம், இதுபோலப் பேசப்படுகிறது.

நம்முடைய குரலொலியின் அளவு எவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவு அதிகமாக அவர்கள் பேச ஆரம்பிக்கிறார்கள். நாம், கெடுக்கிறோமாம்! அதுவும் மக்களை!!

புலியின் வாய் சிக்கிய மான்களை, அதன் வாயில் அகப்படாதே — ஓடித்தப்பிவிடு என்று உபதேசம் செய்தால், பாதிக்கப்பட்ட புலி, சீறுமல்லவா? அதைவிட அதிகமான சீற்றத்தைக் காண்கிறோம், அவர்களிடம்!

ஆத்திரம் ஒரு பக்கம்! ஆயாசம் மற்றோர் பக்கம்! கோபக்கனல், கண்களில்! கொந்தளிப்பு உள்ளத்தில்! கூத்தாட, வார்த்தைகளைக் கொட்டும் அந்த வஞ்சகப் பிம்பங்களுக்கு, நம்மீது ஆத்திரம் அதிகமாவதற்குக் காரணம், நாம் மக்கள் மன்றத்தின் முன்சென்று இதுபோன்ற விஷயங்களை எடுத்துரைப்பதுதான்.

ஆலமரத்தடியிலோ, ஐந்தாறு பேர் சந்திக்குமிடத்திலோ, உணவுக்குப்பின் ஓய்வு பெறும் நேரத்திலோ, வீட்டு மாடியிலோ, காலத்தை நகர்த்தும் பொழுதுபோக்காகவோ, நம்முடைய பணி இல்லை.

மக்கள் மன்றத்தின்முன், செல்லுகிறோம்! மனதுக்கு நேர்மையாகத் தென்பட்டதை எடுத்துச் சொல்லுகிறோம்—எழுதுகிறோம். சொல்லச் செல்லும்போது, வழியில் நாம் தாங்கிச் செல்லும் சங்கடங்கள் பல உண்டு! எழுத எடுக்கும் பேனாவில், வர்ணமைகூட இல்லை — ஒட்டாத இங்கி—எனினும் தளராது, எழுதுகிறோம்!!

அந்த முயற்சியைக் காணும் ஆதிக்கபுரியினர், ஆயாசமும் ஆத்திரமும் தெரிவிக்கிறார்கள். நாம், கெடுக்கிறோமாம் மக்களை! அதுவும், எந்த மக்கள் இத்தனை நாட்களும், அடிமையாய், ஊமையாய், அவதிப்பட்டுக் கிடந்தார்களோ, அவர்களிடமேபோய் விஷயங்களை எடுத்துக் கூறி விஷத்தடாகம் ஆக்குகிறோமாம் அவர்கள் உள்ளங்களை! — இந்த இடம்தான், அவர்களுக்கு எரிச்சலை உண்டாக்குகிறது.

ஏழையின் அவதிபற்றி ஒய். எம். சி. ஏ. மாடியிலும், ஜாதி பேதம் பற்றி சன்மார்க்கக்கட்டிடத்திலும், அனைவரும் ஒன்று என்பதுபற்றி ஆத்ம ஞான சபையிலும், அழகாகப் பேசிவிட்டு, கிடைத்ததைப் பெற்றுக்கொண்டு, 'கிருஷ்ணா! கோவிந்தா!' என்று வாய் விட்டுச் சொல்லியவண்ணம், வந்ததைக் கொண்டு சென்று இல்லக் கிழவியிடம் தந்து, பிள்ளைகள் உடம்பில் பட்டுச் சொக்காயும், மனைவியின் உடலை தங்கம் தொங்கும் மரமாகவும், ஆக்கிடாமல், மக்கள் முன் போய் பேசுகிறோமல்லவா — அதுவும், கஷ்ட நஷ்டங்களைத் தாங்கிய வண்ணம். இந்த இடம்தான், அவர்களால் சகிக்க முடியவில்லை!

முடியாதுதான். அடிமையின் கண்களிலே எழும்பும் புது ஒளி, ஆண்டானுக்குப் பிடிக்காது! ஏழை ஜாதியின் எண்ணத்திலேயிருந்த மாசு துடைக்கப்படுவது, எத்தனுக்கு ஒத்துவராது! பாசிபடர்ந்த குட்டையில் கொட்டமடிக்கும் பெருமீன்களுக்கு பாசியும் தூசும் நீக்கப்படுவது பரமானந்தமாக இருக்காது! வாதைப்பட்டவன் கண்களில் புது ஒளியும், தாழ்த்தப்பட்டவன் உள்ளத்தில் உரிமை வேட்கையும், உந்திக்கிளம்புவதைக் கண்டு, ஜார் மன்னன் சகிக்கவில்லை! சார்லஸ், ஆனந்தப்படவில்லை! லூயி, மகிழவில்லை! மாறாக, தூங்கும் சிங்கங்களைத் தட்டியெழுப்பிடும் திருப்பணியிலீடுபட்ட பாசறையின் வீரர்கள்தான், மகிழ்ந்தார்கள். அந்த மகிழ்ச்சியே, மலர்கிறது, 'கெடுக்கிறார்கள்! கெடுக்கிறார்கள்!' என்று கெடுமதியாளர் எழுப்பும் கூச்சலைக் கேட்கும்போது. கனி பழுக்கும் கட்டம் காத்துக்கிடப்போர், நாம். அதனால்தான், கர்த்தபக்குரலில் கதறும் இந்த உபயபயர்களைக்கண்டு நம்முடைய உள்ளங்களில், கவலை அரும்பவில்லை; மாறாக, களிப்பு மலர்கிறது. அந்தக் களிப்பு, நாம் பட்ட கஷ்ட நஷ்டங்களைத் துடைத்து விடுகிறது. எந்த மக்கள் மன்றம், விழித்தெழவேண்டு

மென்று விரும்புகிறோமோ, எந்த மன்றம் 'ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே!' என்று ஆனந்த கீதம் எழுப்புகிறதோ, அந்த மக்கள் சமுதாயத்தைக்கண்டு, நாம் மன மகிழ்ச்சியடைகிறோம்—மாற்றார் கோட்டத்தில் மனமருட்சி, கோலோச்சுகிறது. இதனாலேயே, 'கெடுக்கிறார்கள்! கெடுக்கிறார்கள்!' என்று கூவுகிறார்கள்.

சகஜம்தான்—லெனினைப்பார்த்த ஜார், வீரனே! உன் பணி மெத்தச் சிறந்தது!' என்று சொல்லவில்லை—புத்தனைக் கண்ட பார்ப்பனீய மதத்தார், 'பொன்னொளியே! உன் புகழ் ஓங்குக!' என்று திருப்பதிகம் பாடவில்லை—ஆபிரகாம் லிங்கனின் நீதியுணர்ச்சிகண்ட வெள்ளையர் இனம், 'விடுதலைப் பணியில் ஈடுபட்டவனே!' என்று வாழ்த்துரை வழங்கவில்லை — அந்தக் கொள்கை விளக்குகளின் ஒளியினைக்கண்டு, இருண்ட இல்லங்களிலே, புன்னகை பூத்ததே ஒழிய, இன்ப வாழ்வினரின் இதயங்கள் புயல் வீசும் காடாகத்தான் இருந்தது. அந்தக் கட்டத்திலிருக்கிறார்கள், இங்குள்ள ஆதிக்கபுரியினர். நம்முடைய பணியின் வலிவு, ஆண்டாண்டு காலமாக அவர்கள் அனுபவித்துவரும் சூதுக் கோட்டைகளைத் தூள்தூளாக்குகிறது. மகிழவா, செய்வர்! ஒருக்காலும், ஒப்பார். அதனால்தான், ஆயாசப்படுகின்றனர், சில சமயம்—பல நேரங்களில் ஆர்ப்பரிக்கின்றனர். ஆனால், நம்முடைய குரல், அவர்களது மாடமாளிகைகளின் அடிப்பீடத்தை ஆட்டுகிறது எனும் உண்மையை அவ்வளவு எளிதில் ஒத்துக்கொள்ள முடியாத காரணத்தால், இழிச்சொல்லும் பழியும் வீசுகின்றனர்! ஏதேதோ சொல்லித் தூற்றுகின்றனர்!!

சற்றேறக்குறைய இங்கிருக்கும் ஆதிக்கபுரியினருடன் போட்டி போடுமளவிலிருப்பவன், ஆப்பிரிக்க நாட்டு அதிபன், மலான். அந்த ஆள், கடந்த மே 3-ந் தேதி, நீண்ட காலமாகத் தன்னுடைய நெஞ்சைக் கொத்திய ஒரு உண்மையை வெளியிட்டிருக்கிறான். ஒரு வேளை, இங்கிருப்போரைப் போல அந்த உண்மையை ஒளித்து வைக்கத் தெரியாத திறமைக் குறைவோ அல்லது அடக்கிவைக்க முடியாததன் விளைவோ, தெரியவில்லை — அந்த உண்மையை வெளியிட்டிருக்கிறான்.

மக்களைக் கெடுக்கிறோம்!—என்று, கூவுகிறார்களல்லவா, இங்குள்ளோர். அதுபோலவே, அவனும் கூறுகிறான்—ஆபிரிகாவிலுள்ள மக்களைக் கெடுக்கிறார்களாம்! யார்? ஐக்கிய நாடுகள் சபையிலிருப்போர்! "ஆபிரிக மக்களே! நீக்ரோ தோழர்களே! நீங்கள் அடக்கப்படுவதைக் கண்டு மனம் வெதும்புகிறோம். தாழ்த்தப்பட்டவர்களாக, தவிக்கிறீர்களே, நீங்கள்! தாங்கொணாத துயரத்தை அனுபவிக்கிறீர்களே!" என்று எடுத்துரைக்கிறார்களாம்.

"இப்படிச் சொல்லலாமா?—அதுவும், தாழ்த்தப்பட்ட மக்களிடம் போய் இப்படிச் சொல்லலாமா? அவர்களுக்கு ஆத்திரமன்றோவரும்! அந்த ஆத்திரம் சாதாரணமாகயில்லையே!!" என்று ஆயாசப்படுகிறான். இவ்வண்ணம் ஆத்திரமூட்டுவதாலேயே தென் ஆபிரிகாவில் அமைதியில்லாமல் ஆங்காங்கும் சண்டைகளும் சச்சரவுகளும் பெருகிக் கொண்டிருக்கிறதாம். மலானின், ஆயாசம் இது! அவன் பூமியில் நடக்கும் அக்கிரமங்களைக் கண்டிக்கும் பிறநாடுகளைப் பார்த்து, 'என் தேசத்திலிருக்கும் மக்களைக் கெடுக்கிறீர்கள்!' என்று கூறுகிறான்.

பிறநாடுகள், கெடுக்கின்றனவாம்! எப்படி? ஆபிரிக மலானின் அடாபிடியில் கிடக்கும் நீக்ரோக்களைப் பார்த்து, நீங்களும் மனிதர்கள் தானே—என்று கூறுவது, கெடுப்பதாம்! ஆபிரிகமலான் கூறுகிறான்! ஐக்கிய நாடுகள் சபை வகுத்து வைத்திருக்கும் மனித உரிமைச் சாசனம்—காட்டுமிராண்டிகளையும், தாழ்த்தப்பட்டவர்களையும் வீறுகொள்ளச் செய்து விடுகிறதாம்! 'உரிமையாம் உரிமை! இவர்களுக்கென்ன படிக்கத் தெரியுமா? பல்லிளித்து எங்கள்பின்னே கை கட்டி நிற்கத் தெரியும். இந்தக் காட்டுமிராண்டிகளுக்கு கல்வி வேண்டுமாம்! வோட்டுரிமை வேண்டுமாம்! சகிக்க முடியாத விஷயங்களை உரைக்கிறது. ஐ. நா. சாசனம்' என்று பகிரங்கமாகத் தெரிவிக்கிறான். இந்தக் கூற்றினைக் கேட்கும், இங்குள்ள மகிபர்கள், மலான்மீது பாய்வர்! மாபாவி — என்பர்!! இன்னும் சில தினங்களில் பண்டித நேருவும், பட பட வென்று வார்த்தைகளைக் கொட்டி சட சட வென்றோர் அறிக்கை விட்டாலும் விடலாம்! இவ்விதம் கூறும் மலான், ஐ. நா. மீது சாட்டும் குற்றம், இப்படிப்பட்ட உரிமைகளைத் தர வேண்டுமென்று ஐ. நா. சொல்வது? இப்படிச் சொல்வதால் இங்கே இருக்கும் மக்கள், அந்த உரிமைகளையன்றோ கேட்கிறார்கள்! என்று கிலேசப்படுகிறான். அவர்கள் உரிமைக் கேட்க ஆரம்பித்து விட்டார்களாம்! அந்த உணர்ச்சிக்கு வித்திட்டது, ஐ. நா. சாசனமாம்!! ஆத்திரப்படுகிறான் மலான். அந்த வெறியனோடு, இங்கிருக்கும் 'மனு தர்மிகளை' ஒப்பிட்டுப் பார்க்கிறோம் நீதி வழங்கும் உரிமை சாசனத்தின் மீது நெஞ்சிலிரக்கமற்ற மலானுக்கு ஆத்திரம் பாய்கிறது! அநீதியைத் துடைக்கப் போராடும், நம்மீது, 'கெடுக்கிறார்கள்!' எனும்குற்றத்தை வீச இங்குள்ள பஞ்சாங்கமேந்திகள் பரபரக்கின்றனர்!

உரிமைகளைப்பற்றிப் பேசி, ஆபிரிகரின் உள்ளங்களைக் கொதிக்கச் செய்து விட்டதாம்—ஐ. நா. சபை. மலான், கூறுகிறான்!

உரிமைகளைப்பற்றிப் பேசி, இங்குள்ளோரின் உள்ளங்களைக் கெடுத்து விட்டோமாம், நாம். ஆதிக்கபுரி, கூறுகிறது, இங்கு! அந்தக் கூற்றோடு நின்றுவிடுவதில்லை,

வகுப்புவாதிகள்.
துவேஷிகள்
பிளவு உண்டாக்குபவர்கள்
பித்தர்கள்

என்கிற வசைமாரியும் பொழிகின்றனர்! இந்த ஆதிக்கபுரியின் ஏக தலைவனாக அமர்ந்திருக்கிறாரே நேரு—மோதிலாலின் செல்வர்—அவர் எந்தக் காரணங்களுக்காக நம்மீது இழி சொற்களை அள்ளி வீசுகிறாரோ, அதே சொற்களை—அவர் பிரதமர் என்கிற காரணத்தால்! — அடக்கி மடக்கி அள்ளித்தருகிறான், மலான்!

நேருவுக்கு, மனித உரிமை கோரும் நாம்—பித்தர்கள்! எத்தர்கள்!!

ஆனால், இதே பட்டத்தை நேருவுக்கு வழங்குகிறான், மலான்.

அவர் ஆபிரிகாவிலுள்ள கருப்பு நிற மக்களுக்கிழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டிக்கிறாரல்லவா—அதனால் மலான், சீறுகிறான்.

"நேரு, வெள்ளை இனத்தின் விரோதி"

"இதை நான் பகிரங்கமாகக் கூறுகிறேன்"

"அதனால்தான் அவர் கருப்புநிறத்தவர்களுக்கு உரிமைவேண்டும் என்று கூறுகிறார்."

நேரு, உரிமைவேண்டும் எனக் கூறுகிறாராம், வாதைப்பட்ட இனத்துக்கு! அதனால், அவர் உலகத்திலுள்ள வெள்ளையர்கள் எல்லோருக்கும் விரோதியாம்!! கூறுகிறான், மலான்.

ஆதிக்கபுரி நம்மீது வீசுகிறதே, 'பார்ப்பனர்களின் எதிரி!' என்று, அந்த வாசகமும் மலான்வீசும் வார்த்தையும் ஒன்றாகத் தென்படுகின்றதா?

இன்னும் ஒரு 'அக்னியாஸ்திரத்தை' வீசுகிறான், மலான். நம் மீது, ஆதிக்கபுரியினர், இன்னும் வீசிக்கொண்டேயிருக்கும் அஸ்திரம், அது!

"கருப்பு நிற மக்களுக்கு உரிமை கொடுக்க வேண்டுமென்று கூறுகின்றனரே! அப்படிக் கொடுத்தால் எங்கள் கதி என்னாகும்? நாங்கள் எல்லாம் மூட்டைகட்டிக்கொண்டு எங்காவது ஓடவேண்டுமென்பதுதானே அதன் அர்த்தம்!"

கேட்பது, மலான்! இடம், கேட்டவன்!! இதேபோல சென்னைப் பட்டினத்திலிருப்போரும், உரிமை கோரும் நம்மைப்பார்த்துக் கேட்கின்றனரல்லவா, அடிக்கடி.

"திராவிடநாடு என்று கேட்கிறீர்களே! அந்த நாடு வந்துவிட்டால் எங்கள் கதி என்னாகும்? எங்களையெல்லாம் விரட்டித்தானே அடித்துவிடுவீர்கள்! அதற்குத்தானே, தனிநாடு கேட்கிறீர்கள்!!"

இதே குரலைத்தான் மலானும், எழுப்புகிறான். மலானையும், சுரண்டிக் கொழுக்கும் அவன் வெள்ளை இனத்தையும் ஆபிரிக்காவைவிட்டு ஓடு என்று சொல்லவில்லை, ஐ. நா. சாசனம். "அங்கு வாழும் மக்களை வாட்டாதே! நிறபேதத்தால் மனிதனைப் பார்த்து பரிகாசம் செய்யாதே! அவன் உழைப்பில், உருவாகிறது, உன் வாழ்வு. அதை, எண்ணிப்பார்! நீ, ஆண்டையாக இருக்கிறாய்! அவன் அடிமையாகயிருக்கிறான்!! சுகம் பெற நீயும், வாதைப்பட அவனும் இருப்பது மனித நீதிக்குப் புறம்பானது. அடிப்படை உரிமைக்கு, வெடி வைப்பது. அவனையும் பேசவிடு! அவனுடைய கண்களிலும் அறிவொளிதென்பட, அனுமதிகொடு! அவனையும் வாழச்செய் — மனிதனை — மிருகமாக்காதே" என்றுதான் கூறுகிறது. இதனையே பண்டிதரும், எடுத்துரைக்கிறார். இதனைக் கேட்கும் மலானின் இதயத்தில், எரிச்சல் உண்டாகிறது—இத்தனை நாட்களும் அனுபவித்த சுரண்டல் வாழ்வுக்கு ஆபத்து வரும்போலிருக்கிறதே எனும் ஆயாசத்தால்! அதனால், ஒரு கண்ணால், ஐ. நா. சாசனத்தையும் அதைப் பற்றிப் பேசுவோரையும்—மற்றோர் கண்ணால், அந்த உரிமைகளைப்பற்றி அறிந்த கென்யட்டா போன்ற வீரர்கள் நீக்ரோ மக்களிடம் செய்யும் பிரச்சார வலிவையும், அதனால் வீறுகொண்டெழும் அந்த இன மக்களையும், பார்க்கிறான். ஆத்திரம் அலைபுரள்கிறது! கூவுகிறான், 'கெடுக்கிறார்கள்! சொல்லிக்கெடுக்கிறார்கள்! எங்களை விரட்டப் பார்க்கிறார்கள்!!!" என்றெல்லாம்.

இந்த விந்தையான வெறியனின் போக்கைக் கண்டிக்க, இங்குள்ள பத்திரிகைகள் தவறுவதில்லை—பண்டிதரும் அஞ்சுவதில்லை. ஆனால், பண்டிதர்மீது பாய்கிறான் மலான்!—பண்டிதர் சார்பில், அந்தப் பயங்கர மனிதனை, வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அதே நேரத்தில், ஆதிக்க வெறியைக் காப்பாற்றிக்கொள்ள ஆபாச வார்த்தைகளை அள்ளித் தெளிக்கும் மலானைக் கண்டிக்கும் மாவீரர்கள், அவன் வீசுவதுபோன்ற அதே குற்றச்சாட்டுகளை, இந்நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளைப் பெற்றுத்தரப் போராடும் நம்மீது அள்ளி வீசுகின்றனரே — அதற்கென்ன பொருள்?

மலான், வெறியால் உளறுகிறான்—மனமாரக் கண்டிக்கிறோம்.

ஆனால், அதே குற்றச்சாட்டுகளை வீசி, நம்மைக் கண்டிக்கின்றனரே—இவர்கள், நாம் என்ன கேட்கிறோம்—மலான் கூறிய வார்த்தைகளை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். "இங்கு வாழும் மக்களை வாட்டாதே! ஜாதி பேதம் காட்டி, நீ உயர்ந்தவன் என்று கூறிக்கொள்ளாதே! அவன் உழைப்பில் உருவாகிறது, இந்த நாடு. அதை எண்ணிப் பார்! நீ அடிக்கிறாய்—அவன் எவ்வளவு பொறுமையோடு சகித்துக்கொள்கிறான். அந்தப் பொறுமையை எண்ணிப் பார்! சுகப்பட நீயும், அதற்கு ஓர் சாஸ்திரமும்—வாதைப்பட அவனும் இருப்பது அறநெறிக்குப் புறம்பானது அடிப்படை உரிமைக்கு வெடிவைப்பது. அவனையும் வாழவிடு! அவனும் உன்னைப்போல அதிகாரத்தில், அந்தஸ்தில், உயர்வாழ்வில் உலவட்டும். அதைக் கண்டு அழுகையைப் படாதே! சந்தோஷப்படு!!" இதுதானே, நாம் கூறிவருவது. இதற்கென்ன பழிகளை வீசுகிறார்கள் நம் மீது. வகுப்புவாதி! பித்தன்! காட்டுமிராண்டி! துவேஷிகள்!—இன்னும் எத்தனை எத்தனை!!

என்ன பொருள்? மலான் சீறுகிறான்—தெளிவாகக் கூறுகிறோம், ஆதிக்கத்தை இழக்க விரும்பாததால், இப்படியெல்லாம் உளறுகிறான் என்று!

நேருவும் பிறரும் இங்கே சீறுகின்றனரே—நம்மீது. என்ன காரணம்?

எண்ணிப் பாருங்கள் — அப்போது அந்த உண்மை புலப்படும்.

ஆதிக்கத்தை இழக்கக்கூடாதெனும் ஆசையால், மலான் அலறுகிறான்! அவன் அட்டகாசம் உலகத்தின் காதுகளில் ஒலிப்பதால், உலக அரங்கில் களிநடனம்புரியும் பண்டிதர், அவன் போக்கைத் தவறெனக் கண்டித்து, 'சபாஷ்' பட்டம் பெறுகிறார். ஆனால், அதே பண்டிதருக்கு, இங்குள்ள 'மலான்களிடம்' அகப்பட்டு சித்திரவதைப்படும் நம்முடைய நினைவு வந்ததும், 'பித்தர்கள்!' என்று ஏசுகிறார். இங்கும் 'சபாஷ்' பட்டம் பெறுகிறார்!!

நிலை, இது. மீளும் மார்க்கம் என்ன? எண்ணிப் பாருங்கள்! அப்போது தெரியும், திராவிட முன்னேற்றக் கழகம் செல்லும் பாதை, எதுவென்பது!!

❁

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரில் ஈடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 9—5—54 [ஞாயிறு

சேலம் மாநாடு

★

"ஆணையிடுங்கள்! செய்து முடிக்கிறோம் அறப்போரா? தயங்கவில்லை! அறுநூறு தோழர்களை அனுப்பிவைத்தோம்! அடக்குமுறைகளா? கவலையில்லை, எமக்கு! கழகத்தைக் கோட்டையாக்கும் காரியங்களையாற்ற தயங்காதவர்கள், நாங்கள்!" என்று சேலத்திலே கூடிய மாநாட்டிலே, அம்மாவட்டச் செயலாளரும், மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவருமான தோழர். ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள், கர்ஜித்தார்! காளையல்ல, அவர்—எனினும் அவர் குரலில், வாலிபத்தின் மிடுக்குத் தென்பட்டது!! அவர் கூறியதைக் காட்டுவதுபோன்ற புத்தொளிகள்போல, மாநாட்டிலே கலந்துகொண்ட தோழர்கள், பல்லாயிரம்.

சீமான்களின் சல்லாபக்கூடமாக இருந்தஇயக்கத்தை சாதாரணமானதுகள் சங்கமமாகும் இயக்கமாக ஆக்கிய பெருமை, சேலத்துக்கு உண்டு! அந்தச் சிறப்புறு மாவட்டத்திலே, கழகத்தின் கொள்கைகளைப் பரப்பிடும் நல்லெண்ணத் தூதர்கள் ஏராளம். கழகம், அவர்களின் உயிர் நாடி! சொந்தச் சொத்து!! மாநாடு கூடிய இடமும், குழுமிய மக்கள் வெள்ளமும் கண்ணையும் கருத்தையும் பறித்தன. ஆழ்கிணற்றுக்குள் கிடக்கும் நீரைக் கரைக்கு இழுக்கப் படாதபாடுபடும் மாவட்டம், அது! அதனாற்றான்போலும், மூடநம்பிக்கைக் கடலில் தவிக்கும் மக்களைக் கரையேற்றும் மாபெரும் பணியிலும், பாடுபடுவதை அன்று முதல் கைக்கொண்டு வருகிறார்கள். அந்தச் சீரிய செயலின் விளைவாக, நடந்த மாநாட்டின்போது காணாத, புது முகங்கள் பலவற்றைக் கண்டோம்! பூரிப்புத் தென்படும் பணியின் வளர்ச்சியினையும் கண்டோம்!!

தூரத்திலிருந்து பார்க்கும்போது மாநாட்டின் கொட்டகை முழுமையும், இருவர்ணக் கொடிகள் நிரம்பி, எண்ணத்தை அள்ளிக் கொண்டிருந்தன! மாநாட்டினரின் முயற்சி போலும் என்ற எண்ணமே, எழும்பிற்று. அருகிற் சென்று பார்க்கும்போது, ஒவ்வொரு கொடியிலும் ஒவ்வொரு கழக ஊரின் பெயரும் பொறிக்கப்பட்டிருந்தது. ஆங்காங்குள்ள கிளைக்கழகத்தினர், மாநாட்டின் வெற்றியில் தங்களது கடமையும் கலந்திருக்கிறதென்று காண்பிக்க, கொண்டு வந்து கட்டினராம், அக்கொடிகளை!! கூவி அழைத்த அக்கொடிகள் வரிசையைப்போல, ஆடியோடி வேலை செய்த தொண்டர் படையினர், ஏராளம். அவர்கள், இரவு பகல் பாராது, இரண்டு நாட்களும் பணிபுரிந்தனர்! மாநாட்டுக்கு முன்பு எத்தனை நாள், எவ்வளவு தோழர்களுக்கு, தூக்கமில்லையோ!

ஓரிடத்தில் பெரியதொரு நிலப்படத்தை வரைந்து வைத்திருந்தார்கள். சேலம் மாவட்டத்தையும், அங்கிருக்கும் ஊர்களையும், ஓடும் ஆறுகளையும், முக்கிய தொழில்களையும் குறிப்பிடும் வகையில். அதோடு, மாவட்டத்தின் பல பகுதிகளிலுள்ள, கிளைக் கழகங்கள் எந்தெந்த ஊரில் இருக்கிறதென்கிற விபரத்தையும், குறியிட்டுக்காட்டியிருந்தார்கள். அந்தப் படத்தைப் பார்க்கும்போது, சேலம் மாவட்டத் தோழர்களின் பொதுப்பணியின் அளவு மட்டுமல்ல, வளர்ந்திருக்கும் நமது கழகத்தின் வெற்றியும் விளங்கியது. குக்கிராமம்! சிற்றூர்! பேரூர்!!—இதுபோல, எண்ணற்ற இடங்களில், கழகக் கிளைகள்.

திட்டம் போட்டு, எடுத்ததைச் செய்துமுடிக்கும் ஆற்றலும், நெஞ்சுறுதியும், சேலத்துத் தோழர்களின் உள்ளங்களில் நிரம்பித் ததும்புகிறது. இந்த உள்ளங்கள், சேலத்தில்மட்டுமல்ல, கழகம் இருக்கும் ஒவ்வோரிடத்திலும் காண்கிறோம், இன்று! இத்தகைய காட்சியே, ஒரு விடுதலை இயக்கத்தின் வெற்றிக்கட்டமாகும். இதனை வீணர்கள் உணர மறுப்பர். கருத்துக்குருடர்கள் உரைத்திடக்கூசவர். ஆதிக்க அம்புகள், அறிந்தும் அலட்சியப்படுத்த நினைக்கும்! ஆனால், பொதுவாழ்க்கையில் தொட்ட கொள்கை, பூந்தோட்டமாகும் அளவுக்கு வளர்ந்திருப்பதைக்காண அந்தக் கொள்கைக்காகப் பாடுபடும் வீரர்கள், வெற்றியென்றே கொள்வர். கூடிக்கலையும் மாநாடுகள் நடைபெறுகின்ற இந்நாட்களிலே, நமது மாநாடுகளுக்குமட்டும் இவ்வண்ணம் மக்கள் தொகையும், சிறப்பும் அதிகமாவதன் இரகசியத்தை, மாற்றார் உணரவேண்டும் — உற்றாரும் எண்ணிப் பார்த்திடவேண்டும் —மன எரிச்சல், போதுமென்ற மனம், இரண்டும் எழாத நிலையில். அப்போதுதான் நாம் ஏந்தியிருக்கும் கொள்கை உரம் விளங்கும்!

சீமான்களும், பூமான்களுமல்ல, சேலம் மாநாட்டைக் கூட்டியோர். எனினும் அவ்வளவு பெரிய மாநாட்டைக் கூட்டி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும், நெஞ்சுறுதி உண்டாகிறது, அவர்களுக்கு. இந்த உறுதியும் நம்பிக்கையும் ஏற்படக் காரணமாகயிருப்போர், யார்? பொது மக்கள்! அந்த மக்கள் மன்றத்தின் ஆசியும் ஆதரவும் வளர்கிறது. ஏன்? நமது கொள்கை உரத்தால்! இதனை அறியாத வெறியர்கள், பலபலச் சொல்லி, ஊளையிடலாம். இனி, ஊளைகள் நில்லாது! உழைப்பே வெல்லும்!—இந்த உண்மையை மாற்றாருக்கு எடுத்துக் காட்டுவதுபோல, இவ்வளவு சிறப்புடன் மாநாட்டை நடத்தி முடித்த நண்பர்கள் யாவரையும் பாராட்டு

கிறோம். மாநாட்டின் வெற்றிக்குப் பாடுபட்ட ஜி. பி சோமசுந்தரம், செயலாளர்: ப. ராமலிங்கம், துணைச் செயலாளர்: ப. கண்ணன், பொருளாளர்: பி. எம். குப்புசாமி, தொண்டர்படைத் தலைவர்: இரா. தாண்டவன், துணைத் தலைவர்: பி. எம். கோபால், ஆகியோரும், நூற்றுக் கணக்கான தொண்டர்களும், இன்னும் ஆத்தூர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., சேலம் நகர தி. மு. க. செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் ஆகிய அனைவரையும், அவர்களுக்கு ஆதரவாக நின்ற சேலத்து மக்களையும் வாழ்த்துகிறோம்! வளர்க, உரிமைத்தாகம்! வாழ்க, வீரர்கள்!!

※

★ புதிய பணி ★

விரைவிலே மலான் ஆகவேண்டும் என்ற நோக்குடன் இருக்கிறாரோ என்று அச்சப்படவேண்டிய விதமாக நடந்துவரும், இலங்கைப் பிரதமர் கோத்தலாவலே, இங்கிருந்து சென்றுள்ள தமிழர்களுக்கு இழைத்துள்ள கொடுமையை இங்கு கண்டிக்காத கட்சி இல்லை. புள்ளி விபரங்களைக் கொட்டிக் காட்டியும், வரலாற்றுத் துணுக்குகளை எடுத்துக் காட்டியும் வாதிட்டுப் பார்த்தாகிவிட்டது. குமுறல் கிளம்பிற்று! இந்த நிலையில் கொத்தலாவலே, மேனாட்டு ராஜதந்திரிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி தந்திரமாக நடந்து இந்திய சர்க்காரை இளித்தவாயனாக்கிவிட்டது. நேரு—கொத்தலாவலே ஒப்பந்தம், நம்மவர்களைத் தாக்கும் சம்மட்டியாகிவிட்டது. இதைஎவ்வளவு விளக்கியும், இந்திய சர்க்கார் உணருவதாகக் காணோம். எப்படிமுடியும்? இலங்கையில் இரத்தத்தைக் கொட்டிக் கொண்டிருப்பவர்கள், வடநாட்டுக்காரர் அல்ல, தமிழர்!! அவர்கள் தவிக்கின்றனர், தத்தளிக்கின்றனர்; இந்திய சர்க்காரோ ஒரு நாட்டின் பிரதமரின் புன்னகையும் கைலாகும் கிடைத்தால் போதும் என்ற முறையில், கேடு பயக்கும் ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு விட்டு, கண்ணை மூடிக் கொண்டுவிட்டது.

கொத்தலாவலே வெற்றிக் கொண்டாட்டம் நடத்துகிறார்.

சேனநாயகாவால் சாதிக்க முடியாது போனதை நான் செய்து காட்டினேன் பார், என்று பேசிச் சிங்களவரின் அன்பைப் பெறுகிறார்.

தனக்குச் சாதகமான ஒப்பந்தம் கிடைத்ததற்காக டில்லி பாதுஷாக்களுக்கு விருந்துபசாரம் நடத்துகிறார்.

தமிழர் தத்தளிக்கும் நேரத்தில், அவர்களின் தவிப்பை அதிகமாக்கும் ஓர் ஒப்பந்தம் அவர்கள் தலை மீது சம்மட்டியாகிடும் வேளையில், கொத்தலாவலே தந்த மது விருந்திலே மயங்கி, மேனாட்டு நடனமாடி மகிழ்ந்தனர், நேரு குடும்பத்து நாரிமணிகள்! இலங்கை வாழ் தமிழர்கள், வெட்கமும் துக்கமும் தாங்கமாட்டாமல், தலை குனிந்து நின்றனர்.

அகில உலகப் பிரச்னைகள் பற்றிக் கவனிக்கவும், ஆசியப் பிரச்னை பற்றி விவாதிக்கவும், நடைபெற்ற மாநாட்டிலே, நேரு கலந்து கொண்டார். தமிழரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை! அவர்தம் பிரச்னை பற்றிக் கவனிக்கவுமில்லை! இத்தனைக்கும் தமிழர்கள், தமக்கே உரித்தான பெருந்தணத்தால், தலைவரே! வருக! மணிகருள் மாணிக்கமே வருக! ஆசிய ஜோதியே வருக! என்று அன்புரை வழங்கினர் சேற்றிலே காலைப் புதைத்துக் கொண்டுள்ள உழவுமாடுகளையாவது மிராசுதாரன், அன்புடன் தட்டிக் கொடுப்பான். பண்டித நேரு, தன் புகழ் பாடும் தமிழ் மக்களைக் கண்டு பேசி, ஆறுதல் மொழி புகன்றாரில்லை!! அவருக்கு, ஆசியப் பிரதமர்கள் மாநாட்டு வேலையிலே, இந்தப் பிரச்னை மறந்து போகக்கூடும் என்ற கருத்துப்போலும்! இலங்கை இந்தியக் காங்கிரஸ், இந்த ஒப்பந்தத்தைப் பரிசீலனை செய்யும் கூட்டம் நடத்தி, முடிவினை இந்தியாவின் முடிசூடா மன்னருக்குக் கூறினால், பீடை ஒழியும், பிணி நீங்கும், என்று கருதினர். நேரு பண்டிதரோ அசைந்து கொடுக்கவில்லை

இலங்கை இந்தியக் காங்கிரசின் தலைவர், தோண்டைமான், நேரு—கொத்தலாவலே ஒப்பந்தம் தீமையே பயக்கும், எனவே மீண்டும் தலைவர்கள் கலந்து பேசி கேடு பயக்காத, நியாயம் வழங்கவல்ல, புதியதோர் ஒப்பந்தத்தைத் தயாரிக்க வேண்டும் என்று வலியுறுத்தும்தீர்மானத்தை நேருபண்டிதரிடம் கொடுத்திருக்கிறார் அதைப் பண்டிதர், டில்லிக்காவது கொண்டு சென்றிருந்தால் தமிழர்கள் பாக்கியசாலிகள்தான்!

தமிழர்களிடம் பற்று இருப்பவரின் போக்கு இவ்விதமாகவா இருக்கும்!

திராவிடம் தனி அரசாகத்திகழ்ந்தால், நிலைமை இங்ஙனம் இருக்க முடியுமா!

திருச்சி பொதுக்குழுவில் நமது கழகம், நேரு—கொத்தலாவலே ஒப்பந்தத்தைக் கண்டித்திருப்பதுடன், சென்னை மாநில சர்க்காரையும், கட்சிகளின் தலைவர்களையும் கலந்து கொள்ளச்செய்து, பேச்சுவார்த்தை நடத்திப் புதியதோர் ஒப்பந்தம் காணவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறது.

புதிய ஒப்பந்தம் தேவை' என்பதைத் தொண்டைமான் வலியுறுத்தியிருக்கிறார்.

இங்கு நாம் பொறுப்பை ஏற்றுக் கொண்டு பணி புரிந்தாலொழிய— டில்லி, தொண்டைமானின் கோரிக்கையைக் கவனிக்காது.

எனவே பொதுக் குழுவில் இலங்கை சம்பந்தமாக நாம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை வலியுறுத்தி, பொதுமக்களின் போராதரவைத் திரட்டி, டில்லி சர்க்காருக்கு தமிழரின் எழுச்சிக்குரலை எடுத்துக் காட்டவேண்டிய கட்டம் பிறந்துவிட்டது.

கொத்தலாவலே செய்யும் கொடுமையைக் கண்டிக்க எல்லா ஏடு

களும், எல்லாக் கட்சிகளும்போட்டியிட்டுக்கொண்டு முன்வரும். ஆனால் இந்தப் பிரச்னையில், டில்லி சர்க்கார் காட்டியுள்ள அலட்சியம், ஆணவப்போக்கு ஆகியவற்றினை எடுத்துரைக்க, திராவிடரின் கழகங்களால்மட்டுமேமுடியும்.

1 இலங்கையில் தமிழர் படும் அவதி

2 நேரு—கோத்தலாவலை ஒப்பந்தத்தின் தீமைகள்.

3 புதிய ஒப்பந்தம் காண வற்புறுத்தல்.

4 அதற்கான முயற்சியில், சென்னை சர்க்காரும், எல்லாக் கட்சித் தலைவர்களும் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

என்ற விஷயங்களை விளக்கி பொதுமக்களிடம் ஆதரவு திரட்டி, டில்லியை உணரச் செய்யவேண்டும்.

தோட்டக்காரனின் முதுகுப் புண்ணைப் பார்த்து, அருவருப்படைந்து, மேலாடையால் அதை மறைத்துக்கொள் என்று புத்தி கூறிவிட்டுச் செல்லும் சீமானின் போக்கிலே டில்லி பண்டிதர் இருக்கிறார், தமிழரின் வேதனைக் குரல், அவருடைய அலட்சியத்தையும் துளைக்கும் வலிவுள்ளது.

தமிழகமெங்கணும், இலங்கைப் பிரச்னையை எடுத்துரைக்க வேண்டும்—டில்லியின் போக்கைக் கண்டிக்கவேண்டும்

விரைவிலே இதற்கு ஓர் 'நாள்' குறித்துக்கொண்டு பணியாற்ற வேண்டும்.

இதை எந்த முறையில் செய்வது என்பது பற்றிய கருத்துரை 'திராவிடநாடு' அலுவலகத்துக்கோ 'நம் நாடு' அறிவகத்துக்கோ அனுப்பி வைத்தால், மகிழ்ச்சியுடன் வரவேற்கப்படும்.

திராவிடத் தோழர்காள்! இலங்கையில் வதையும் நமது தோழர்கள் சார்பிலே பணியாற்றத் தயாராகுங்கள். டில்லி உணரட்டும், திராவிடத்தின் விழிப்புணர்ச்சியை.

❋

ஆரிய—திராவிட விளக்கம்

[கிருஷ்ணமூர்த்தி]

இன்று நற்றமிழ் நாட்டில் திராவிடர்களனைவருமொன்றுகூடி தமிழ்த் தாயின் கொடியின் கீழ் நின்று திராவிடத்தையும் அதன் மொழியாகிய தமிழையுங் காக்க உவந்து முன்வந்துளதை யறிந்த ஆரியர்கள் ஆரிடமும் திராவிடமும் ஒன்றென்றுரைக்கும் வெற்றுரையை வீழ்த்துவான் வேண்டியே இக்கட்டுரையை வரையத் துணிந்தனம்.

திராவிடத்திற் குணறவிடம் தெற்கு; ஆரியத்திற் குறைவிடம் வடக்கு. முன்னையதின் மொழி தமிழ்; பின்னையதின் மொழி ஆரியம் (சமஸ்கிருதம்.)

திராவிட மொழியாகிய தமிழ் அவனியரும்பிய நாள் தொட்டிந் நாள் வரை வழக்கினின்று வீழாது எழில் நிறை குன்றா இளமையுடன் பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய் தனதியல்பினின்றொரு சிறிதும் பிறழாது விளங்குகிறது.

ஆனால் ஆரியமோ என்றும் உயிரோடில்லாது வழக்கினின்று வீழ்ந்திறந்துபட்டது. தமிழ்ஒலிவமைப்பு 8-அங்குல 12-அங்குல மூச்சுக்கேற்றவாறமைக்கப் பட்டுள்ளது. ஆனால் வடமொழி ஒலிவமைப்போ மூலாதாரத்தினின்று தொடங்குவதோ டியற்கைக்குப் பெரிதும் முரணான முறையிலமைக்கப்பட்டுள்ளது.

வரிவமைப்பில் 'அ' என்ற தமிழ் எழுத்தில் 'அ' 'உ' 'ம்' என்ற எழுத்துக்கள் அடங்கியுள்ளனவென்றும் அம் மூன்றெழுத்துக்களும் முறையே கடவுள், உயிர், உலகம், முதலியவைகளைக்குறிக்கின்றனவென்றும், மேலும் அ என்ற எழுத்தில்ஓ என்றஎழுத்தும் உள்ளதென்றும் அறிகிறோம்.

இவ்வளவு அரும் பொருள்கள் வடமொழி அகரத்தில் காண்கிறோமில்லை. தமிழ் மொழியிலுள்ள உயிரெழுத்துக்களனைத்தும் அகர ஒலியை அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஆனால், வடமொழியினுயிரெழுத்துக்களில் அகர ஒலியை அடிப்படையாகக் கொள்ளாத ரு, லு என்ற எழுத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளதால் மாறுபாடு தோன்றவில்லையா?

தமிழ் மொழிக்கு உயர்திணை அஃறிணை உண்டு.

ஆனால், ஆரிய மொழிக்கில்லை. திராவிட மொழிக்கும் ஆரிய மொழிக்குமுள்ள வேறுபாடுகளைக் கூறினோம். திராவிட நாகரிகத்திற்கும் ஆரிய நாகரிகத்திற்குமுள்ள மாறுபாடுகளைக் கீழே கூறுதும்.

அனைவருக்கும் ஓர் அறமென்பது திராவிட நாகரிகம்; ஆனால், ஒவ்வொரு குலத்திற் கொவ்வொரு அறமென்பது ஆரிய நாகரிகம்.

சாதி வேறுபாடில்லாதது திராவிட நாகரிகம்; ஆனால் சாதி வேறுபாடுகள் கொண்டுள்ளது ஆரிய நாகரிகம்.

பிறப்பாலுயர்வு தாழ்வு காணாதது திராவிட நாகரிகம்; ஆனால், பிறப்பாலுயர்வு தாழ்வு காண்பது ஆரிய நாகரிகம்.

கொல்லாமையை அடிப்படையாகக்கொண்டு கடவுளை வழிபடுவது திராவிட நாகரிகம்; ஆனால், உயிரைக்கொன்று கடவுளை வழிபடுவது ஆரிய நாகரிகம்.

பிறப்பைப் பொருட்படுத்தாதொழுக்கத்தால் உயர்வடைதலென்பது திராவிட நாகரிகம்; ஒழுக்கத்தைப் பொருட்படுத்தாது பிறப்பைப் பொருட்படுத்தி உயர்வடைதலென்பது ஆரிய நாகரிகம்.

பெண்களுக்கு வீடு பேறளிப்பது திராவிட நாகரிகம்; ஆனால் பெண்களுக்கு வீடு பேறளிக்காதது ஆரிய நாகரிகம்.

அனைவரும் கல்வி பெறல்வேண்டுமென வலியுறுத்துவது திராவிட நாகரிகம்; ஆனால் குறித்த குலத்தோர் கல்விபெறுதல் வேண்டுமென்பது ஆரிய நாகரிகம்.

உயிர் இழந்து மானங்காப்பது திராவிட நாகரிகம்; ஆனால் மானமிழந்தாவது உயிரைக்காப்பது ஆரிய நாகரிகம்.

திராவிடத்தின் மறைதிருக்குறள்; ஆனால் ஆரியத்தின் மறை நான்கு வேதங்கள்.

திராவிடர்கள் தங்கள் நிலத்தை ஐவகையாகப் பிரித்தார்கள்; ஆனால் ஆரியர்கள் அவ்வாறு பிரித்தார்களில்லை.

திராவிடமும் ஆரியமும் ஒன்றென்றுரைப்பது வெற்றுரை. ❁

கடிவாளமில்லாத குதிரை!

மைசூர் கடிதம்

கடிவாளமில்லாத குதிரை!

அதிகாரவெறிபிடித்து அலைகிறார்கள்!!

நாடு வெறுக்கிறது இவர்கள் போக்கை!

காங்கிரசும் நாசமாகிறது இவர்களால்!

இவர்கள் தொலைந்தால் நன்மை உண்டு!

கோஷ்டிமனப்பான்மை தொலைய வேண்டும்!

ஆறுமணி நேரத்துக்கு அதிகமாகவே, ஒருவர் மாறி ஒருவராக இது போலப்பேசினர்—ஏசினர்—முடிவு ஏற்படவில்லை, வார்த்தைகள் மேலும் மேலும் கடுமையாகிக் கொண்டுவந்தன, பிரச்னை தீரவில்லை, பகை சாகவில்லை, மாறாக முறுக்கேறிவிட்டது. இப்போது கலைவோம், மீண்டும்கூடுவோம், பிரச்னையைக் கவனிக்க, என்று கூறிவிட்டுக் கலைந்தனர். யார்? நாட்டை ஆளும் தனித்தகுதியும், உரிமையும் பெற்றவர்கள் நாங்களே என்று மார்தட்டிக் கொள்ளும் காங்கிரஸ்காரர்கள்தான்—இங்கு அல்ல, மைசூரில்! ஊர் எதுவாக இருந்தாலும், இந்த நிலைமை எங்கும் இருக்கிறது, சில இடத்தில் வெடித்து வெளிவருகிறது. சில இடத்தில் மூடிவைக்கப்பட்டு முணுமுணுப்பு அளவோடு இருக்கிறது, வேறு சில இடத்தில் 'நாள் நட்சத்திரம்' பார்த்துக் கொண்டு நமது கைங்கரியத்தைத் துவக்கலாம் என்று இருக்கிறார்கள், ஆனால் எங்கும் இருக்கிறது இந்த நோய்; எல்லா இடங்களிலும் நமக்குள் சண்டை பிடித்துக்கொண்டால், எதிர்க்கட்சிகள் ஏளனம் செய்யும், நம்மை வீழ்த்திவிட்டு அவை அதிகாரத்தைக் கைப்பற்றும் என்ற பயமூட்டியே பிளவு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

*

சாந்தகஸ்கம்பெனிஉரிமையாளருக்கும் சாண்டோ சதாசிவத்துக்கும் தகராறு புகைந்து கொண்டிருக்கிறது—புதிய வெல்வட்டுச் சட்டை தைத்துத் தரவில்லை, சம்பளத்தைக் கூட்டித்தரவில்லை, பார்வேலை செய்யும் பத்மாவிடம் பேச அனுமதிப்பதில்லை, இப்படிப் பல மனத்தாங்கள்; எனினும் மணி அடித்து, ஆசியா கண்டத்து அதிஅற்புத சாம்பியன், சாண்டோ சதாசிவம் இப்போது யானையைத் தனது மார்பின் மீது நிற்கவைத்துக் காட்டுவார், என்று மானேஜர் அறிவித்தானதும் சாண்டோ சதாசிவத்துக்கு, மக்கள் முன் தன் திறமையைக் காட்டிட வேண்டும், கரகோஷம் கேட்டுக் களிப்படைய வேண்டும் என்ற எண்ணம் பிடரியைப் பிடித்துத் தள்ளும்—கொஞ்சநஞ்சம் கோபமும் சலிப்பும் இருந்தாலும், சங்கரன் அங்கு வந்ததும், போய்விடும், புன்னகையுடன் மக்கள் முன் சென்று வணக்கம் கூறுவான், காரணம் சங்கரனும் சாண்டோ ஆகும் பக்குவம் பெற்றிருக்கிறான்! இதுபோல, காங்கிரசுக்குள் நிலைமை வளர்ந்துவிட்டிருக்கிறது!!

மைசூரில், முதலமைச்சராக இருப்பவர், அனுமந்தய்யா—பார்ப்பனர். ஆச்சாரியார் போலவே பக்திப் பிரசாரம் செய்து பாமர மக்களை மயக்கிவிடலாம் என்ற நம்பிக்கை கொண்டவர். தன்னை அதிகாரத்திலிருந்து விரட்டக்கூடியவர்கள், எவரும் இருக்க முடியாது என்ற எண்ணம் கொண்டவர், ஆச்சாரியார் போலவே.

மைசூர் பிரதேச காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவர், வீரண்ணகவுடா என்பவர். இவர் கவுடர் வகுப்பு, பார்ப்பனரல்லாதார்!!

இந்த இருவருக்கும் பகை புகைகிறது, பிளவு, கீறல் அளவிலே இல்லை, அகண்டு கொண்டு வருகிறது.

முதலமைச்சர், காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்குக் கட்டுப்பட்டுத்தான் நடந்து கொள்ள வேண்டும்—காங்கிரஸ் கமிட்டியின் கருத்தை அறிந்துதான் சர்க்கார், சட்ட திட்டம் செய்ய வேண்டும், என்று வீரண்ணா வாதாடுகிறார்.

சட்டசபையில் எனக்குப் பெருவாரியான ஆதரவு இருக்கிறவரையில், நான் என் இச்சைப்படி நடந்து கொள்வேன், சர்க்காருடைய நடவடிக்கைகளை ஆதரித்துப் பொதுமக்களிடம் சர்க்காருக்கு நற்பெயர் ஏற்படச் செய்வதுதான் காங்கிரஸ் கமிட்டியின் கடமையே தவிர, சர்க்காரின் போக்கைக் கட்டுப்படுத்த முனைவது கூடாது, என்கிறார் அனுமந்தய்யா!

அனுமந்தய்யா ஒழிக! என்கிறார்கள், வீரண்ணா குழுவினர். வீரண்ணா ஒழிக! என்கிறார்கள் அனுமந்தய்யா அணிவகுப்பினர். அனுமந்தய்யாவும் ஒழிக! வீரண்ணாவும் ஒழிக! என்கிறார்கள் சிலர். இப்படியே நீடித்துக் கொண்டு போனால், மக்கள், காங்கிரஸ் ஒழிக! என்று தீர்ப்பளித்து விடுவார்கள் என்று, புத்திக்கூர்மை படைத்தவர்கள் கூறுகிறார்கள். இரு சாராரில், யாருக்கு, நேரு பண்டிதரின் ஆதரவு இருக்கிறதோ அவர்களுக்கே வெற்றி என்ற நிலைமை இருப்பதால், இருதலைவர்களும், சமயம் கிடைக்கும் போதெல்லாம், டில்லிக்கு யாத்திரை செய்து, நேரு பூஜை செய்து வருகிறார்கள்; வரம் யாருக்கு அளிப்பது என்று தெரியாமல், நேரு திணறுகிறார், மக்களோ நிலைமையைப் புரிந்து கொண்டு கேலி பேசுகிறார்கள்.

*

மனம்விட்டு பேசுவோம், மாச்சரியங்களை நீக்கிக்கொள்வோம், கட்டுப்பாடும் ஒற்றுமையும் காணுவோம், காங்கிரசின் தூய்மையைக் காப்பாற்றுவோம் என்று சூள் உரைத்துக்கொண்டு. சென்ற கிழமை, சென்னப்பட்டணம் என்ற ஊரிலே, காங்கிரஸ் சமிட்டி கூடிற்று—மந்திரிகள் வந்திருந்தனர். பிரச்சினை முக்கியமானதாக இருப்பினும், இந்த இரு சாராரும் நடத்தும் 'குருக்ஷேத்

100 ஆண்டு ஆனாலும் ஆகாது!

இந்திமொழி, இன்னும் நூறு ஆண்டுகாலம் ஆனாலும் தேசீய மொழியாகாது என்று டில்லி பார்லிமெண்டில், திருச்செங்கோடு தொகுதி உறுப்பினர் தோழர் பட்டாபிராமன் (காங்கிரஸ்) இந்தக் கிழமை முழக்கமிட்டார்.

திரம்' அவர்களின் இலாபத்துக்காகத்தான், இதிலே நமக்கென்ன பலன் என்று எண்ணிக்கொண்டு, கமிட்டியினர் நாற்பதின்மருக்கு மேல், ஏறத்தாழ மூன்றில் ஓர்பகுதியினர் கூட்டத்துக்கே வரவில்லை! அவ்வளவு கடமை உணர்ச்சி! வந்திருந்தவர்கள் ஆறுமணி நேரத்துக்கு அதிகமாகவே பேசினர். அதுபோது அவர்கள் ஒருவர்மீது ஒருவர் வீசிக்கொண்ட வசைமொழிகளே, துவக்கத்தில் உள்ளவை. இந்த 'ஏசலை'த் தொடர்ந்து நடத்தலாம் என்ற 'சமரச' ஏற்பாட்டின் பேரில் கமிட்டி கலைந்திருக்கிறது.

*

பெங்களூர் வட்டத்தைச்சேர்ந்த ஸ்ரீதர் என்பவர், பட்டவர்த்தனமாகப் பேசினார், இந்த இரு தலைவர்களுமே இலாயக்கற்றவர்கள், இவர்களாலேயே காங்கிரசார் இரண்டு 'உத்தி'யாகப் பிரிய நேரிடுகிறது, எனவே இந்த இருவருமே, தத்தமது பதவிகளை விட்டு மரியாதையாக விலகிக் கொள்வது நல்லது. காங்கிரசும் உருப்படும், நாடும் சீர்ப்படும் என்ற கருத்திலே பேசியுள்ளார். அனுமந்தய்யாவும் வேண்டாம், வீரண்ணாவும் வேண்டாம், என்று இவர் கூறுவது வேறுயாருக்காகவோ, புரியவில்லை! எல்லாம் பதவி மோகம், அதிகார வெறி பிடித்து அலைகிறார்கள், காங்கிரசுக்குள், இரண்டு 'கோஷ்டி' இருக்கிறது. இந்த இரண்டும்எந்தக்காலத்துக்கும் ஒத்துப் போகப் போவதில்லை, சமரசமாகவே முடியாது, எனவே இரு தலைவர்களும், விலகினால்தான் விமோசனம் பிறக்கும் என்கிறார் ஸ்ரீதரன்.

காங்கிரஸ் கமிட்டித் தலைவர், வீரண்ணா, காங்கிரஸ் சர்க்காரின் நடவடிக்கைகளைப் பகிரங்கமாகக் கண்டித்துப் பேசுகிறார், குறைகூறுகிறார், பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி அளித்து மந்திரிகளின் போக்கைக் கண்டித்திருக்கிறார். இதை அனுமந்தய்யா 'அனுமதிக்க முடியாது' என்று பேசுகிறார். இதே அனுமந்தய்யா, முதலமைச்சராகா முன்பு, பிரதேச காங்கிரஸ் தலைவராக இருந்தபோது அன்று இருந்த காங்கிரஸ் சர்க்காரைத் தயவு தாட்சண்யமின்றிக் கண்டிக்கவில்லையா, என்று கேட்கின்றனர், அனுமந்தய்யா பதிலேதும் கூறவில்லை!

தொடர் கதை!
"அமைந்த பாதை"
அடுத்த இதழில் ஆரம்பமாகிறது

அனுமந்தய்யாவின் போக்கை, பிரதேச காங்கிரசால் கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே, காங்கிரஸ் கமிட்டித்தலைவர், அனுமந்தய்யாவை கடிவாளமில்லாத குதிரை என்று கண்டித்துப் பேசியிருக்கிறார். நல்லவேளையாக, பாஷை 'குதிரை' அளவோடு நிற்கிறது! இப்போதைக்கு!!

காங்கிரசின் தலைவராக நேரு பண்டிதர் இருக்கிறார், எனவே, அவர் காங்கிரஸ் கமிட்டியின் கண்ணியத்தைக் காப்பாற்றவே முனைவார் என்று கருதிக்கொண்டு, வீரண்ணா, டில்லி சென்று பண்டிதரிடம் முறையிட்டுக்கொண்டார்—ஆனால் என்ன செய்வது, காங்கிரஸ் தலைவர் என்ற முறையிலே பண்டிதருக்கு; வீரண்ணாவை ஆதரிக்கலாம் என்று தோன்றுகிறது; பிரதம மந்திரி என்ற முறையில் முதலமைச்சர் அனுமந்தய்யாவை ஆதரிக்கத் தோன்றுகிறது; இந்த இரு நேருக்குள்ளே மனப்போர்!!

இந்த நிலைமை காரணமாக, துருவா என்ற உறுப்பினர் கூறுகிறபடி மக்களிடம் காங்கிரசுக்கு இருந்துவந்த செல்வாக்கு மங்கிக் கொண்டு வருகிறது.

*

மைசூரில் உள்ள இந்த நிலைமை, ஒவ்வோர் சமயம் ஒவ்வோர் இடத்திலே தெரியத்தான் செய்கிறது, நாளாகவாக, இந்த நிலைமை முற்றுவதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன. காரணம் என்ன? போராட்டப் பாசறையாக இருந்து வந்த காங்கிரஸ், இன்று பதவி பெறும், போட்டிப்பந்தயக் கூடமாகிவிட்டது — எனவே, இதிலே இப்போது ஆள்பிடிக்கும் படலம், உத்தி சேர்க்கும் காரியம், சிண்டு முடியும் திருக்கூத்து, இவை நடைபெற்றவண்ணம் உள்ளன. அமைச்சர் ஆகாதவர்கள், கமிட்டிகளிலே இருந்துகொண்டு, எந்தவகையில் அதிகாரம் செலுத்தலாம், பசையும் சுவையும் பெறலாம் என்று கணக்கிடுவதும், அமைச்சராகிவிட்டவர்கள், அங்கு என்ன அறுவடை காணலாம் என்று எண்ணுவதும் அந்த வயலுக்கு வேலியும் காவலும் ஏற்படுத்த முயலுவதும், எங்கும் நிறை முறையாகிவிட்டது. சென்னையில் ஆச்சாரியார் முதலமைச்சராகி, காங்கிரஸ் கமிட்டியின் கட்டுக்கு உட்பட மறுத்தார், கடைசிநேரம் வரையில்! நல்லவேளையாக, நோய் கண்டது, ரசாபாசம் தவிர்க்கப்பட்டது!!

கொள்கை, திட்டம், இவைகளிலே கருத்து வேற்றுமை இருந்தால், நாடு, அதனால் நற்பயனைக் காண முடியும்! ஆனால் காங்கிரசாருக்குள் மூண்டெழும் பகை, மைசூர் போலவே, எங்கும், தனிப்பட்டவர்களின் போக்கு நோக்கு, அதிகாரம் பெறுவதிலே ஏற்படும் போட்டி, பொச்செரிப்பு, ஆகியவை காரணமாகவே உள்ளன. இதனால், காங்கிரசுக்கு மட்டுமல்ல, நாட்டுக்கே பெருந் தீங்குதான் விளைகிறது. கடிவாளமில்லாத குதிரை என்று அனுமந்தய்யாவைக் கூறினார் வீரண்ணா. கூர்ந்து நோக்கினால்காங்கிரஸ் கட்சியே இன்று கடிவாளமில்லாத குதிரையாகி விட்டிருக்கிறது!! கொள்ளு! என்றால் வாயைத் திறக்குமாம், கடிவாளம் என்றால் வாயை மூடிக் கொள்ளுமாம், குதிரை!! காங்கிரசும், அதிகாரம் என்றால் ஆனந்தமடைகிறது, கடிவாளம் போன்ற நிலை கொண்ட, எதிர்க்கட்சி என்றால், சுளிக்கிறது, கால்களை உதைத்துக் கொள்கிறது, ஏற்கமறுக்கிறது! கடிவாளமற்ற குதிரை காடுமேடுதானே சுற்றும், வழியறிந்து வகையுடன் செல்லும்! நாடு, இதனால் நாசமாகிக் கொண்டு தான் வருகிறது, என்செய்வது.

4-ம் பக்கத் தொடர்ச்சி

கத் தக்க கருத்துகளை வழங்கினால், வகையறியாதாரும் விளக்கம் பெறுதாரும், மன மயக்கம் பெறுவரேயன்றி, சூது, சூழ்ச்சியைக் கண்டறியும் திறன் படைத்த எவரும் தீண்டார், சிந்தார். எனவே பொற்காலம் என்று கூறிவிட்டு, புராணகாலத்தை நினைவுபடுத்துவதை அறிவுடையார் எவரும் ஏற்கார், மடம் உடையார், சடை முடி உடையார், அவர்தம் உறவு உடையார், கோயில் சொத்தைக் குத்தகையாக உடையார், குறை மதியினரைச் சூறையாடும் போக்கு உடையார், எனப்படுவோர் வேண்டுமானால், பளா! பளா! என்று கூறி வரவேற்பர், காரணம் தமது சுயநலத்துக்கும் சுகபோகத்துக்கும் புராண கால நிலை பாதுகாப்பளிக்கும் என்ற எண்ணத்தால். அமைச்சர் பதவியிலிருந்துகொண்டு—இருப்பதால்—பாகவதராகிக் காட்டும் சுப்ரமணியனார், நெஞ்சு நெக்குருகப் பேசிடும் புராணங்கள், திராவிடத்தைப் பொறுத்தமட்டில், இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகட்கு முன்புதான் கட்டப்பட்டன என்பதை சைவரும் ஆராய்ச்சியும், வைணவரும் தெளிவும் கொண்டவர் எவரும் மறுத்திடார். மேலும், தமிழ் மொழியில் உள்ள பெரும்பாலான புராணங்கள், வடமொழியிலிருந்து பிழியப்பட்டன என்பதையும் ஆராய்ச்சியாளர்கள் மறுப்பதில்லை.

இந்த ஆயிரம் ஆண்டுகளிலே 'பொற்காலம்' எது, எவ்வண்ணம் இருந்தது என்பதை அமைச்சர் விளக்கக் காணோம்—விளக்கம் பெற்றதாகவும் தெரிவிக்கக் காணோம்.

பண்புகள் சிறந்திருப்பது பொற்காலம் என்று கூறுவரேல், இந்த ஆயிரம் ஆண்டுகாலமாக, பண்பு கெட்ட தன்மையற்று இருந்தகாலம் எது என்பதை அறிய ஆசைப்படுகிறோம்.

பஞ்சம் பட்டினி பசி இன்றி, மக்கள் சுகப்பட்டு இருப்பது 'பொற்காலம்' என்றால், இந்த ஆயிரம் ஆண்டுகளிலே பஞ்சம் பட்டினி ஏற்பட்டு மக்கள் பதைத்து, சிறகொடிந்த பறவைகள் போல, தீயில் வீழ்ந்த குழவி போலத் தவித்த 'காலம்' உண்டு, என்று நாம் எடுத்துக்காட்ட இயலும்—மறுத்திட முன்வருவாரா அமைச்சர்.

பொற்காலம் என்றால், கலைச் செறிவும் காவிய வளமும் கொண்டதோர் நிலை எனக்கூறுவரேல், அந்நிலை, இந்த ஆயிரம் ஆண்டுகளிலே மின்னுவதைக் காட்டிலும், அழகும் பயனும் மிகஒளிதந்தகாலம், தொல்காப்பியம், அகம்புறம், பத்துப் பாட்டு எட்டுத்தொகை எனக்கூறப்படும் காலத்திலல்லவா என்று கேட்கிறோம்.

பொற்காலம் எது என்று அவர் கூறினாரில்லை. அதன் தன்மையாது என விளக்கிடவுமில்லை, புராணத்துக்கும் பொற்காலத் தன்மைக்கும் என்ன தொடர்பு எனச் செப்பவுமில்லை. எனினும், எல்லாவற்றையும் விளங்கிக் கொண்டவர்போல, அந்தத் திருச்சபையிலே கடித்திருக்கிறார், வாழ்வுப் பிரச்னை ஏதுமற்ற சுகபோகிகளின் கூட்டத்தில் பேசுகிறோமென்ற துணிவால். புராண மூலம், பொற்காலம் மீண்டும் பிறக்கும் என்று ஆரூடம் கூறுகிறார் குறைமதி எவ்வளவு துணிவுதரும் என்பதற்கோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது அமைச்சரின் ஆலயப் பேச்சு.

பொற்காலம் ஒன்று இருக்கத்தான் செய்தது—அமைச்சர் கருதுகிறபடி புராண காலமல்ல—தமிழக வரலாறு ஆயிரம் ஆண்டுகள் மட்டும் கொண்டதல்ல—புராண இதிகாசங்கள் புகாமுன்னம், பூந்தோட்டத்தில் நச்சரவம் புகா முன்னம், திராவிடத்தில் ஓர் பொற்காலம் இருக்கத்தான் செய்தது — அதனை அறிவிக்கவும் மீண்டும் பெறவும் ஓர் நன்முயற்சி நடைபெற்றவண்ணம் இருக்கிறது—அந்த நன்முயற்சியைத்தான், நாவலிவும் அறிவுக் குறைவும் கொண்டவர் நாத்திகம் என நிந்திக்கிறார்கள்.

அந்த நாட்களில், திராவிட நாடு திராவிடருக்கு இருந்த காலத்தில், பசும்புற்றரையில் பால்வண்ண உடை உடுத்தி, பண் பாடி, "காதலுக்கும் கடவுளுக்கும் பேதமுமில்லை, கால வேறுபாட்டால் அவை அழிவதுமில்லை" என்று இசைத்து, இன்ப வாழ்வு வாழ்ந்தான் திராவிடன். அவன் தோள் வலிமை கண்டு, தோகையர் சொக்கினர், கவிகள் உருகினர், ஓவியக்காரர் களித்தனர், எதிரிகள் திடுக்கிட்டனர்.

அவன் அந்நாளில், "யாமார்க்கும் குடியல்லோம்" என்று வாழ்ந்தான். "நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே" என்று உரைத்தான். "எல்லோரும் ஓர் குலம்" என்றான். ஜாதி இல்லை, ஜாதிப்பூசல் இல்லை. குருட்டு நம்பிக்கை இல்லை, குள்ளமனப்பான்மை இல்லை. கோழைத்தனமில்லை. காட்டில்வாழ் மிருகங்கள் அவன் கைக்குத் தவிடுபொடி! காதல் வாழ்வு அவன் பிறப்புரிமை! நாட்டைக் காத்தல் அவன் கடமை என்று இருந்தது.

அவன் தீ மூட்டிச் செந்திலம் பாடி, தேவரை அழைக்க எதிரியை அழிக்கச் சொல்லி வாழ்ந்தானா? எதிரிகள் அழிய, யாக யோகம் செய்தானா? சூது வஞ்சனை சூழ்ச்சி அறிவானா? பித்தலாட்டம் பேசினானா? இல்லை, இல்லை. திராவிடன், அவைகளை அறியான், புராணிகனிடம் அவைகள் இருக்கக் கண்டு, கைகொட்டி நகைத்தான்! திராவிடன் உள்ளம், வெள்ளை! அவன் புராணிகருக்கு இந்நாட்டையும் தன்னையும் கொள்ளை கொடுக்காமுன்னம் அவனே குறுநிலக் கொற்றவனாக வாழ்ந்து வந்தான்.

தமிழ் மொழியே தேன் என்றான். தமிழர் வாழ்வுக்கே, தன்னை அர்ப்பணம் செய்தான். சங்கம் அமைத்தான். நூற்கள் இயற்றினான். கோட்டை எழுப்பினான். அகழி வெட்டினான், உழவு, வாணிபம் சிற்பம், முதலிய எத்தொழிலும் அவனுக்கு நற்றொழிலே! வெளி நாட்டு மன்னரோடு, சரிநிகர் சமமாக வாழ்ந்தான். அவன் ஆண்ட காலத்தில், பொன் கண்டான், பொருள் கண்டான், முத்துக் குளித்தெடுத்தான், நாகரிக முற்றத்தில் வாழ்ந்தான்.

எப்பக்கம் நோக்கினும் அவன் ஆட்சி. எங்கு பார்ப்பினும் அவன் சிறப்பு. யாரைக் கேட்கினும் அவன் பெருமை. ஆ! அந்த நாளை இன்னும் சரியாக உணர, நம்மவரால் முடிவதுமில்லை. சொன்னால் சோர்ந்துவிடுவோர் சிலர். கதையா? என்பர்_பிறர். பயன் என்? என்பர் பிறிதும் சிலர். ஆனால் நாம் புகலுவது புராணமல்ல! சரிதம்! நம் நாட்

டுச் சரித்திரம்! நாம் "வாழ்ந்த" காலத்தில் நிகழ்ந்த நடப்புகள்.

இன்று அது இழந்த காதலாயிற்று. தேய்ந்த கனவாயிற்று! சாய்ந்த நமது தனிச் சிறப்பை மீண்டும் பெற உறுதிகொள்ளத்தான் நாம், திராவிடநாடு திராவிடருக்கே, என்று பரணிபாடச் சொல்கிறோம்.

அன்றொரு நாள் வாழ்ந்த அழகினை மட்டும், எண்ணி ஏதும் செய்யாதிருத்தல் பயன் தராது. கண்ணாடி முன் நின்று, கட்டுத் தளர்ந்தவள், தன் பழயமுகம் எங்கே எனக் கேட்டுப் பயன் உண்டோ! அஃதன்று நம் கருத்து. பின்னர் என்னை? "தன்னை அறிந்து இன்புற" வேண்டுகிறோம். மீண்டும், திராவிட நாட்டை திராவிடருக்காக்குவோம், அதற்காகப் புனலில் புகுவோம். கனலில் குளிப்போம், கஷ்ட நஷ்டமேற்போம், என்று, உறுதிகொள்ள வேண்டும். விடுபட்டால் சுகப்படுவோம், என்று கூறவேண்டும்.

கொற்றவனைக் கோழையாக்கி, தோள்வலிமை உள்ளவனை, வாள்வலிமை கண்டவனை, வரண்ட உள்ளத்தினனாக்கி, நாடு ஆண்டவனை காடாள்வோனாக்கி, நல்வழி கற்றவனை புல்லரின் போகப் பொருளாக்கி, ஜாதிபேதமற்றவனை, ஜாதிக் குழியில் புகுத்தி, ஆபாசத்தை வெறுப்பவனை அதன் அடிமையாக்கி, பிச்சைவாழ்வு வேண்டானை பித்தனாக்கி, பெருநெறிகொண்டானைப் பேதையாக்கி, திராவிடனை சூத்திரனாக்கி, தனது நாட்டிலேயே தாழ்வு அடைந்து, தனக்கென இருந்தனவற்றை எல்லாம் இழந்து, தன் நிலையையும் மறந்து 'தாசனாகி' செத்த வாழ்வு வாழும்படி செய்தது வைதீகக் கூட்டம்!

வாட்போரில் வீழவில்லை நாம்! வீணரின் வஞ்சகப் போரில் வீழ்ந்தோம். நமது கோட்டைகளை இழக்க நாம் கோழைகளல்ல! நம்மை கோழைகளாக்க, நமக்குக் கோணல் புத்தியைப் புகட்டினர். நிலஉலகில் நிமிர்ந்து நடந்த நம்மை அண்டத்தைப் பார், ஆகாயத்தைப் பார் என்றுரைத்து ஏய்த்தனர். பொன்னிலும் மணியிலும் புரண்டு வாழ்ந்த நம்மை புற்றிலும் புதரிலும் நுழையச் செய்தனர்!

கரைபுரண்டோடும் ஆற்றிலே, தோணியில், தோகையருடன் சென்ற திராவிடன், மரக்கலம் அமைத்து, சந்தனம், அகில், முத்து, பவளம் முதலியன ஏற்றிக் கொண்டு, சிலோன், சிங்களம், ஜாவா, சுமத்திரா முதலிய திரைகடல் கடந்த நாடுகளுக்குச் சென்ற திராவிடன், "நெருப்பாற்றின்மீது மயிர்ப் பாலம் கட்டப்பட்டிருக்கிறது; அதன்மீது உன் 'மூதாதையர்' ஆவி செல்லவேண்டும்; அதற்காக ஒரு 'கோதானம்' கொடு" என்று வைதிகர் சொல்லக் கேட்டான், கெட்டான்.

திராவிடத்துக்கும் சுமத்திராவுக்கும் எத்தனை நாள் பிரயாணம்! ரோமுக்கும் புகாருக்கும் எவ்வளவு நாட்களில் போகலாம் என்று பேசிய திராவிடன், வைதிகக் கோளாறினால், இந்திரலோகம், பிரம்மலோகம், அதல சுதல பாதாளம் என்று பேசலானான். அவைகளுக்குச் செல்லவேண்டுமானால், பூஜை செய்ய வேண்டுமென்று எண்ணினான்! இடர்ப்பட்டான்!!

ஆண்டவன் ஒருவனே! அவனுக்கு உருவமில்லை என்று கூறி வாழ்ந்தவன், ஆண்டவன், மச்ச வராக நரசிம்மரூபம் எடுத்தார், என்று எண்ணி நிலைகுலைந்தான்.

ஜாதி இல்லை! பேதமில்லை! என்று கூறியவன், பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்று நாலு வருணம் உண்டு; முதலாமவன் பிரம்மனின் முகத்தில் உதித்தான்; கடைசி வருணத்தான் காலில் தோன்றினான்; முதலாமவன் நான், கடைசி வருணத்தான் நீ, முதலாமவனுக்குத் தொண்டுசெய்வதே சூத்திரன் 'ஜென்மசாபல்யம்' அடையும் மார்க்கம் என்றான், வைதீகன், அழிந்தான் திராவிடன்.

மார்பில் புண்பட உடலத்தை எதிரிகளின் அம்புகள் துளைக்க, ரத்த வெள்ளத்தில் புரண்டேனும் சுதந்திரத்தைக் காப்பேன் எனப் புகன்றவனை, சாஸ்திரிகளின் வருகிற வழியிலே துளசியைக் கொட்டு, மீறி வந்தால் புறக்கடைக் கதவை நாடு எச்சரிக்கிறது.

பெண், வீரத்துக்குப் பேழை, காதலுக்குக் கண், வாழ்க்கைக்குவழிகாட்டி, கல்விக்குக் கருவி என்றான் திராவிடன். சமத்துவம் தந்தான். தவத்தைக் கெடுக்கவும், தன்னினம் வளர பிறனைக் கூடவும், அரசனை மயக்க ஆடவும், ஊர்வசி உண்டு, ரம்பை, திலோத்தமை, மேனகை உண்டு என்றான் புராணிகன்.

பாடுபட்டால் பலன் உண்டு. உழைத்தால்தான் வாழமுடியும், இல்லாததைப் பெற முடியாது என்று கூறிய திராவிடனிடம் காமதேனு உண்டு, கேட்டதைத் தரும், கற்பக விருட்சமுண்டு, நினைத்ததைக் கொடுக்கும் என்றான்.

பூமிக்கும், பிற கிரகங்களுக்கும் உள்ள தொடர்பை ஆராய்ந்துகொண்டிருந்தவனிடம், 'ஆயிரம் தலைகொண்ட ஆதிசேஷன் பூலோகத்தைத் தாங்குகிறான்' எனப் புகன்றான்.

மானென மருளும் கண்களும், மயில் தோகை எனப் பிரகாசிக்கும் உடலும், பிடி இடையும், பெடை நடையும், குயில்மொழியுங்கொண்ட குமரிகளை, கண்டு காதலித்து, மதயானையை அடக்கி, புலியைக் கொன்று கோட்டையைத் தகர்த்து தனது வீரத்தைக் காட்டி மணந்த திராவிடன், இன்று கட்டை வெட்டியும். பங்கா இழுத்தும் வாழவும், பெண்கள், கூட்டுவதும் வழிப்பதும், குலைவதும் எதனால் வந்த வினை?

மொழி, நாகரிகம், கலை, பிற நாகரீகத்தின் ஆதிக்கத்தினால், கெட, அத்துடன் கெட்டான் திராவிடன்.

முழுமதிதான்! ஆனால் மேகம் மறைத்தால், அதன் பால் நிறம் மங்காதா! மணிதான். ஆனால் குப்பையுள் புதைந்துவிட்டால், அதன் ஒளி வெளிவருமா? வீரன் தான்! ஆனால் மனதைப் பறிகொடுத்து விட்டால், அவன் என்ன செய்வான்?

திராவிடன் தனிச்சிறப்பு பெற்றவன் தான்! தரணி ஆண்டவன் தான்! இன்று அடிமைதான்! புராணிக நாகரீகத்தினால்தான், இந்நிலை பெற்றான். அதனின்றும் விடுபட்டால்தான் சுகப்படுவான், முன்னாள் நிலைபெறுவான்.

எழுங்கள் திராவிடரே, வைதிகத்தை விட்டோம், விடுதலை பெற்றோம் எனக் கூறுங்கள். விடுபட்டோம், சுகப்பட்டோம் என்று சொல்லுங்கள், என்று கூறிவருகிறோம்

இந்த முயற்சியை முறியடிக்கக் குரு முயன்று குப்புற விழுந்தார், இப்போது சீடர் சிலம்பம் எடுக்கிறார்!

போகிற போக்கில்!

[சேந்தன்]

அதிகக்கூட்டம் இல்லையாம்—அதனை எடுத்துப்போட்டு தெரிவிக்கிறது 'தினமணி'. பாகிஸ்தான் பிரதமர், கொழும்புவிலிருந்து கராச்சிக்குப் புறப்பட்டபோது அவரை வழியனுப்ப ஏராளமான மக்கள் இல்லையாம். அதனை, அகில உலகுக்கும் தெரிவிக்கும் அற்ப ஆசையில், இந்த விஷயத்தை எடுத்துப் பிரசுரித்துள்ளது! கொழும்பு விமான நிலையத்தில் முகம்மதுஅலியை வழியனுப்ப அதிகக் கூட்டம்தான் இல்லையே என்று, இனிமேற்பட, பாகிஸ்தானையே ஒருவரும் மதிக்காமலா போய்விடுவார்கள்? பண்டிதநேருவும், அடிக்கடி சந்திக்கும் தன்னுடைய பழக்கத்தை நிறுத்திக்கொள்வாரா? இல்லை! இல்லை! கொழும்பு நிலையத்தில் கூட்டம் வராததால் பாகிஸ்தானின் கவுரவம் போய்விட்டதென்றோ, அந்த வாழும் பத்துகோடி மக்களை இனி அலட்சியம் செய்யலாமென்றோ, கருதினால், விளைவு வேதனையில்தான் முடியும்! அதனை அறியாததல்ல, தினமணி. எனினும், போடுகிறது. அவ்வளவு அற்ப ஆசை! வெறுப்பு உள்ளம்!!

*

இது போன்ற வெறுப்புள்ளம் இங்கே உலவுவதால்தான் பாகிஸ்தானிலிருப்போருக்கும் வெறியுணர்ச்சி, அதிகமாகிறது. சில நாட்களுக்குமுன் நிஷ்டார் எனும் லீக் பிரமுகர் பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையில் கர்ஜித்தாராம்! "காஷ்மீரைக் காரணமாகவைத்து, இந்தியாவுடன் போர்தொடுக்க வேண்டும்! வெற்றி பெற்றால், மகிழ்ச்சி அடைவோம். வீழ்ச்சியடைந்தால், பெருமையான ஒரு காரியத்திலீடுபட்டோம் — எனும் பெருமிதம் கொள்வோம்" என்பதாக. அமெரிக்கா அள்ளி வழங்கும் ஆயுத உதவி இருக்கிறதென்னும் தைரியம், அவருக்கு! இதுபோன்ற கோபப் பேச்சுகள் இந்திய மண்ணிலும் இல்லாமலில்லை. சண்டை வந்தால்தானே பணமூட்டைகளுக்குக் கொண்டாட்டம்! பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையிலே சண்டை மூளாதா, என்று எண்ணியவண்ணம் திரியும் பணமூட்டைகள், ஏராளம் இருக்கிறார்கள். எங்கே? வடக்கில்! வடக்குதானே, ஆலையரசர்கள் பூமி!!

*

டில்லி 'லட்சுமிகாந்தனை'ப்பற்றி, இந்த வாரம் ஒரு ரசமான தகவல். வெள்ளையன் காலத்தில் நிர்வாகத் திறமைக்குப் பேர்போன இலாகா, தபால் தந்தி இலாகா! அங்கே எட்டு லட்சம் ரூபாய் 1953ம் ஆண்டில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாம். பிறருக்கு அனுப்பப்படும் மணியார்டர்களையும், இன்ஷியூர்களையும், 'சுவாகா!' செய்துவிடுகின்றனராம். இதுபோல 852 வழக்குகள் கவனத்துக்கு வந்துள்ளதாம் — மேலும் 237 வழக்குகள் கண்டுபிடிக்க முடியாமலே போய்விட்டதாம்! இதுபோல பலப்பல.

*

இந்த அழகிலிருக்கும் டில்லி வட்டாரத்தில், கடந்த சில வாரமாக ஒரு விஷயம் அடிப்பட்டுக்கொண்டிருக்கிறது. நேருவின் சகோதரி விஜயலட்சுமி, வி. கே. கிருஷ்ண மேனன் ஆகியோரைப்பற்றி! வெளிநாட்டிலாகா மந்திரியாக வி. கே. கிருஷ்ணமேனனை ஆக்குவதென்ற முடிவிலிருக்கிறாராம், பண்டிதர். சும்மாயிராரே, அவரது சொந்தச் சகோதரி! அடிக்கடி இந்த 'அன்னக்காவடி' பூமியில் தங்கியிருப்பதைத் தாங்கமுடியுமா? நடனமும் உல்லாசமும் கிடைக்கமுடியுமா, இங்கு? அதனால் அவரை, இங்கிலாந்தின் ஹைகமிஷனராக அனுப்பலாமென்ற எண்ணம் அரும்பியிருக்கிறதாம்! கொடுத்து வைத்த குடும்பம்!!

*

ரூபாய்க்கு 16 அணா என்று இருப்பது, எவ்வளவு சங்கடமாயிருக்கிறதென்று உங்களுக்குத் தெரியுமா? ரூபாயே கிடைக்காமல்—கிடைத்தாலும் கையில் தங்காமல்—தவிக்கும் உங்களுக்கு அந்தச் சங்கடம், தெரிந்திருக்காது! ரூபாய்க்கு 16 என்று இருப்பதாயிருக்கும் சங்கடத்தைப்பற்றிப் பலர், அடிக்கடி யோசனைகள் கூறிவந்தனர். இப்போது அந்த யோசனைகள்படி முடிவெடுக்க முன்வந்திருக்கிறது. பர்மிய அரசாங்கம்! அந்த முடிவின்படி ஒரு ரூபாயை 100 பிரிவாகப் பிரிப்பார்கள். இது எப்படி சவுகரியமாகும் என்று கேட்பீர்கள். எட்டணா, என்றால் அரை ரூபாய், நாலணா கால்ரூபாய், என்று தானே குறிப்பிடுகிறோம். அப்படி குறிப்பிடுவதால், ரூபாய்நாலணாவை குறிப்பிட, ரூ 1—4—0 என்றோ ரூ1¼ என்றோ தானே குறிப்பிட வேண்டியிருக்கிறது. இந்த முறையைவிட புதுமுறையே வசதி வாய்ந்தது எனக் கருதப்படுகிறது. 1¼ ரூபாயைப் புதுமுறைப்படி குறிப்பிடவேண்டுமென்றால் 1. 25 என்று சுலபமாகக் குறிக்கலாமல்லவா? இதனால், ரூபாயின் பிரிவுகள் 16 இருப்பதற்குப் பதில் 100 ஆக ஆக்கலாம் என்று எண்ணுகிறார்கள்.

*

இப்படிப்பட்ட மாற்றத்தைப் புகுத்த வெள்ளையர் காலத்தில் இந்தியாவிலும் ஒருமுயற்சி செய்யப்பட்டது. ஆனால், இந்தச் சிறு மாற்றத்தை, பெருத்தஅளவில்எதிர்த்து எழுதினர், காந்தியார்! ரூபாய்க்கு16 அணா என்பது சாதாரண மக்களிடமெல்லாம் பழகிப் போன சங்கதி என்றும் 100 பகுதிகளாகப் பிரித்தால் அவர்களால் புரிந்து கொள்ள முடியாதென்றும் மிகக் கடுமையாக எதிர்த்தார். இது, அந்தநாள்! இப்போதிருக்கும் பண்டிதர் சர்க்கார், இந்தப் புது முறையைப் புகுத்தலாமா வென்று யோசனை செய்து கொண்டிருக்கிறதாம்.

*

நமது மக்களிடம் இருக்கும் மூடநம்பிக்கைகளைப் பார்க்கும்பொழுது, இந்த பூமி அப்படியே கடலுக்குள் போய்விடக்கூடாதா?—என்ற எரிச்சல் ஓரோர் சமயம் ஏற்படுவதுஉண்டு எனக்கு. திருச்சிக்குஅருகில்புறத்தகுடி எனும் சிறுகிராமம்இருக்கிறது. அங்கிருந்து ஒரு கிருஸ்துவ

சாமியார் பல ஆண்டுகளுக்கு முன் இறந்து விட்டாராம். எப்போதோ இறந்தவரைப்பற்றி, இப்போது மக்களிடம், ஒரு ஆசை வந்திருக்கிறது. கூட்டம் கூட்டமாக அவரது சமாதியைப் போய் தெரிசித்து வந்தால் — தீராத நோய்களெல்லாம் தீர்ந்து விடுகிறதாம்!! "சிகிச்சை உண்மையானதுதான் என யாரும் உத்திரவளிக்க முன்வரவில்லை"யாம் —'தினமணி', ஏடு சொல்கிறது. ஆச்சரியமாயிருக்கும் உங்களுக்கு அற்புதச் செய்திகளைப் பார்ட்டர் கட்டிப்போடும், தினமணியா, இப்படிச் சொல்கிறதென்று!! ஆமாம். காரணம், வேறு எதுவுமல்ல— அந்தச் சாமியார் ஒரு இந்துவல்ல! கிருஸ்துவர்!!

அந்தப் பக்கமாக அண்மையில் நான் செல்ல நேர்ந்தபோது, 'புறத்தகுடி' அதிசயத்தைப் பற்றி ஆச்சரியமான செய்தியொன்றைக் கேள்விப்பட்டேன். அந்த ஊரில், ஒரு பள்ளிக்கூடம் கட்டவேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டதாம்! யாரும்சரிவர உதவிசெய்யாததால், அந்தமுயற்சி, அறைகுறையில் விடப்பட்டதாம் அதனை நிறைவேற்ற வழி தெரியாததால் இது போன்ற 'புறத்தகுடி அதிசய' ஏற்பாடு, கண்டு பிடிக்கப்பட்டதாம்! அது முதல், அங்கே வைக்கப்பட்டிருக்கும் உண்டியலில், பணம் ஏராளமாகக் குவிகிறதாம்!!—கூறுகிறார்கள். விசித்திரமாக இருக்கிறதல்லவா!

★

இதல்லவா சூரத்தனம்

கேட்டீர்களா சேதியை! டில்லி சர்க்காரின் சூரத்தனத்தை விளக்கிடும் சேதி கேட்டீரா! கேட்டோர், கை கொட்டிச் சிரிப்பர்! வெட்கமின்றி, தகவலை டில்லி சர்க்கார் குட்டி மந்திரியே கூறியுமிருக்கிறார்.

டில்லி சர்க்காரின் போக்கைக் கண்டிக்கும் முறைகளிலே ஒன்று, ரயில்வேக்களிலே டிக்கட் இல்லாமல் திரள் திரளாகப் பிரயாணம் செய்வது— அதனால் ஏற்படக்கூடிய தொல்லைகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வது, என்று, தி. மு. க. மாநாட்டிலே நாம் பேசியிருப்பது தோழர்களுக்கு நினைவிலிருக்கும். கையாண்டிகூடச் செய்தார்களல்லவா, நண்பர்களாக இருக்க மறுக்கும் நல்லவர்கள்! அந்த முறை கவைக்குதவாததுமல்ல, சர்வசாதாரணமானதுமல்ல என்பதை விளக்கும் ஓர் சம்பவம் மூன்று திங்களுக்கு முன்பு நடைபெற்றிருக்கிறது. அதிலே டில்லி சர்க்காரின் சூரத்தனம் எப்படிப்பட்டது என்பதும் வெட்ட வெளிச்சமாகி இருக்கிறது.

மார்ச்சுமாத இறுதியில் ஆந்திர நாட்டு உழவர்கள், சர்க்கார் காரியாலயம் சென்று தங்கள் குறைகளை எடுத்துக்கூறும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தத் திட்டமிட்டனர்.

பல்வேறு கிராமத்து மக்கள், உழவர்கள், திரண்டு எழுந்தனர் இதற்காக.

கர்னூல் செல்லவேண்டும், நெடுந்தூரக் கிராமங்களிலிருந்து. ஏழை உழவர்கள், தமது ஏழ்மை நிலையை மாற்றி அமைக்கும்படி தங்கள் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளச் செல்லும்போது, கட்டணம் கொடுத்து ரயிலில் போக, வசதி ஏது! எனவே உழவர்கள், ஆயிரக் கணக்கிலே கிளம்பினர், டிக்கட் இல்லாத பிரயாணம் செய்ய! ஒவ்வோர் கிராமத்திலிருந்தும் அணிவகுப்பு! டிக்கட்டில்லா பயணம்! கர்நூல் செல்வோம் என்ற முழக்கம்!

இதைக்கண்ட சர்க்கார் என்ன செய்தது? என்னசெய்ய முடிந்தது. போலீசால்கூட முடியாது, பட்டாளம் வந்து தடுத்து நிறுத்த வேண்டும் உழவர் படையை! கலாம் என்ன விளையுமோ! இரத்தம் எவ்வளவு பெருக்கெடுத்தோடுமோ, யார் கூற முடியும். எனவே, அந்த யோசனையைக் கைவிட்டு விட்டனர். உல்லாசப் பயணத்துக்காக அல்ல, சொந்தக் காரியத்துக்காக அல்ல, உழவரின் பொது நலனுக்கான கிளர்ச்சித் திட்டமாகத்தான் டிக்கட்டில்லாத பயணம் செய்ய முனைந்திருக்கிறார்கள். சரி, என்ன செய்வது, ரயிலில் பயணம் செய்யட்டும். என்று அனுமதிப்பார்களா! சர்க்காரின் 'பவிசு' என்ன கதி ஆவது? எனவே சர்க்காரின் 'கௌரவத்தை' நிலை நாட்ட, ஒரு திட்டம் கண்டு பிடித்தனர். என்னவென்று கருதுகிறீர்கள்? மார்ச் 21 லிருந்து 26 வரையில், பெஜவாடா—கர்நூல் ரயிலையே நிறுத்திவிட்டார்கள்!! ஐந்து நாட்கள் ரயில் ஓடவே இல்லை!! சர்க்கார் உண்டு, இரண்டு, ஒன்று கர்நூலில், இன்னொன்று டில்லியில். எனினும் உழவரின் எழுச்சிகண்டு என்ன செய்வதென்றறியாது மிரண்ட சர்க்கார், ஐந்து நாட்கள் ரயிலையே நிறுத்திவிட்டார்கள்.

இது போன்ற 'சூரத்தனம்' உலகில் வேறு எங்கேனும் நடைபெறுமா! நடைபெற்றதாக நமக்குத் தெரியவில்லை! திரண்டு எழுந்த உழவர்களை கர்னூல் வரவிடாது தடுத்து விட்டதாகச் சர்க்கார் கருதியிருக்கும் — எழுந்து நின்றோம், ஓடும் ரயில் நின்று விட்டது என்று உழவர்கள் எக்காளமிட்டிருப்பர். மக்களின் விழிப்புணர்ச்சியும், அது வீறு கொண்டு எழுந்தால் சர்க்காருக்கு ஏற்படும் திணறலும் திகைப்பும், அதனால் விளையும் விசித்திரமும் இந்தச் சம்பவத்தின் மூலம் விளக்கமாகிறது. இதனைக் கூச்சமின்றிக் கூறினவர், வேறுயாருமல்ல, ரயில்வே துணை அமைச்சர் அழகேசன் அவர்களேதான்! இதல்லவா சூரத்தனம்!

★

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press.
95, Tirukkachinambi St., Kancheepuram.